# புதினம்

A Freely Circulated Monthly

PUTHINAM

DECEMBER 2019

மலர் 24 இதழ் 11



R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor



L&L LAW SOLICITORS




1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law

46 High street
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com

Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.



லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909







THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777


# உறுதியான ஓர் செய்தி!

சிங்களதேசம் கிராமசபைத் தீர்வினையும் தமிழர்களுக்கு வழங்கக்கூட விருப்பப்படாது என்பதை இலங்கையின் கடந்த கால சிங்கள ஆட்சியில் நடந்தவைகள் நமக்கு நன்றாக உணர்த்துகிறது.

அதுவும் தற்போதைய நிலையில், ஓரிரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை அமைச்சரவையில் பேருக்கு வைத்துக் கொண்டு, 'கிடைத்ததைப் பெற்று, அடங்கி வாழுங்கள்' என்ற போக்குடன் ஆட்சி அதிகார அரியாசனத்தில் அமர்ந்திருக்கின்றனர் ராஜபக்ஷ சகோதரர்கள்.

இந்த நிலையில் சர்வதேசம் என்று ஒன்று இல்லாவிட்டால் மாகாணசபைகளைக் கூட அழித்துவிடும். குறைந்த பட்ச அதிகாரங்களுக்குக் கூட என்ன நடக்குமோ, யாமறியோம்!

சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு பெரிய உண்மையை தமிழ் மக்களுக்கு நன்றாக 'அடித்து' உணர்த்தியிருக்கிறது என்று நம்பலாம். வடக்கு கிழக்கிலுள்ள 80 வீதமான தமிழர்கள் இன்னொரு சிங்கள பௌத்த பேரினவாத வேட்பாளருக்கு தங்களது வாக்குகளை வழங்கி தமது உரிமைக்கு ஆதரவு கிடைக்கும் என்று நம்பினார்கள்.

இரு வேட்பாளருமே சிங்களப் பௌத்த பேரினவாதிகள் என்பதை மறுக்க முடியாது. அதே நேரத்தில், "பிரிக்க முடியாத இலங்கை நாட்டினுள், அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்ற அடிப்படையில், சஜித்துக்குப் பெருவாரியாக தமிழர்கள் வாக்களித்துள்ளனர்" என்று கூட்டமைப்பு தலைவர் குறிப்பிட்டுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி சிறிசேனாவை கூட்டமைப்பு ஆதரித்தது. தமிழ் மக்களின் ஆதரவினால் அவர் வெற்றி பெற்ற போது தமிழர்களின் வாக்குகளே அவர் வெற்றிக்கு வழிவகுத்தது. அந்த நிலையே தொடரும் என்று இம்முறையும் நம்பினார்கள். ஆனால், அது நடக்கவில்லை. இருவருமே சிங்கள பௌத்த பேரினவாதிகள் தான். சஜீத் வென்றிருந்தாலும் வெறும் பேச்சோடு எல்லாம் போயிருக்கும்! சிங்களம் அசையவே அசையாது!

கிழிக்கப்பட்ட பல ஒப்பந்தங்கள் கூறும் நிஜமான செய்தி அது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் ஓரணியில் நின்று வாக்களித்ததன் மூலம், உறுதியான ஓர் செய்தியை ஆட்சியாளருக்கும், சர்வதேச சமூகத்துக்கும் உரக்கச் சொல்லியிருக்கின்றனர்.

சிங்கள பௌத்த இனம் என்று ஓர் இனம். மற்றொன்று சிறுபான்மைத் தமிழனம். அடக்கி ஆள நினைப்பவர்களுடன் எப்படி ஒன்றாக வாழ முடியும்?

தன்மானத்துடன் வாழவைத்தான் அந்தத் தலைவன் அதற்காகக் கடைசி வரை போராடினான்! ஆனால் இன்று - காலத்தைத் தவறவிட்டால் கண்டவனெல்லாம் கதவு தட்டுவான்' எனத் தாயகக்கவி எச்சரித்ததை நினைவுபடுத்துகிற சூழ்நிலைமையில், எவ்வளவு காலத்துக்கு வாழ்ந்து கொண்டிருப்பது?


2020ம் ஆண்டு உங்களுக்கு எப்படி? உள்ளே



English tutor in Sutton
English tutoring for children of all ages on a 1:1 basis or in groups. Classes for 2019/20 start in November 2019.



Main focus on creative writing and comprehension for primary school children and GCSE preparation for secondary school children of all ages.
Call 02089150593 or 07900251586



செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway



அனைவருக்கும் எங்கள்
இதய பூர்வமான கிறிஸ்மஸ்,
புத்தாண்டு வாழ்த்துக்கள்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795



டயபட்டிஸ் சலன்ஜ் ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 0208144 1553
100% கட்டுப்படுத்தலாம்
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com



USED MUSICAL INSTRUMENTS WANTED
பாவித்த, பழுதடைந்த வீணை, மிருதங்கம்
மற்றும் சகலவிதமான இசைக்
கருவிகளையும் எங்களிடம் கொடுத்து
அதிக பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்



DEPENDS ON CONDITION WE WILL PAY RESONABLY
CONTACT : SASI 07985758017





தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



# World Tour Store

## கொழும்பிற்கான சிறந்த பிரயாண ஏற்பாடு செய்ய எம்மை நாடுங்கள்

**COLOMBO fr £458**

## HUGE SAVINGS

**on last minute deals for Christmas & New Year**





### Worldwide Flight Deals

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | fr £413 | Delhi | fr £376 | Toronto | fr £328 |
| Hyderabad | fr £424 | Goa | fr £496 | Bangkok | fr £386 |
| Kochi | fr £428 | Dubai | fr £290 | Singapore | fr £396 |
| Mumbai | fr £376 | Abu Dhabi | fr £293 | New York | fr £262 |

**Visit Our New Branch at WEMBLEY**

Unit 3 A, Plaza Parade, 29-33, Ealing Road, Wembley, HA0 4YA.

**& get Amazing Discounts.**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

BEST DEALS CHEAP FLIGHTS BEST DEALS

**Lewisham:** 111b, Loampit Vale, Lewisham SE13 7TG

*Above fares & offers are subject to availability. T&C's Apply.

3550 ATOL PROTECTED



# ராஜபக்ஷ குடும்பத்தின்
## அடுத்த கட்ட 'ஆட்டம்' ஆரம்பம்!



**தமக்கு வாக்களித்த சிங்கள பௌத்த மக்களுக்கு பகிரங்கமாக கோதபாய நன்றி கூறியது போன்று, அதிகூடிய வாக்குகளை தமக்கு அள்ளிக்கொட்டிய தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சஜித் பிரேமதாச நன்றி கூறாது மௌனம் காப்பதன் மர்மம் என்ன? கோதபாயவை தோற்கடிக்க வேண்டுமென்றே இவர்கள் தமக்கு வாக்களித்தபடியால், எதற்காக இவர்களுக்கு நன்றிகூற வேண்டுமென நினைக்கிறாரா இந்த நன்றிகெட்ட அரசியல்வாதி?**

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த 16ஆம் திகதி நடைபெற்று, ராஜபக்ச குடும்ப ஆட்சி ஐந்தாண்டுகளின் பின்னர் மீண்டும் அரியாசனத்தில் ஏறியுள்ளது.

எது நடக்கக்கூடாதென்று சிறுபான்மையின மக்கள் - முக்கியமாக, வடக்கு கிழக்கு மக்கள் விரும்பினார்களோ அதுவே நடந்தேறிவிட்டது.

தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் முடிவதற்குள் எதிர்பார்த்த அத்தனையும் அடுத்தடுத்து இடம்பெறுகின்றன.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகித்த பத்தாண்டு காலமும் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோதபாய ராஜபக்சவின் யுத்த பிராந்திய எடுபிடிகளாக செயற்பட்ட இராணுவ அதிகாரிகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளனர்.

ஜெனிவாவில் இனப்படுகொலையாளியென அடையாளம் காட்டப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா புதிய இராணுவத் தளபதியாக கோதபாயவுக்கு அனுசரணையாக மைத்திரிபால சிறிசேனவால் முற்கூட்டியே நியமிக்கப்பட்டு அப்பதவியில் தொடர்கிறார்.

வன்னி யுத்தத்தின்போது 53வது இராணுவப் பிரிவின் தளபதியாகவும், வன்னிப் படைத்தலைமையக பிரதம தளபதியாகவுமிருந்த மேஜர் ஜெனரல் கமல் குணரட்ணவை புதிய பாதுகாப்புச் செயலாளராக ஜனாதிபதி கோதபாய நியமித்துள்ளார். தமது ஜனாதிபதி பதவியோடு முப்படைகளின் தளபதி என்ற பதவியையும் தமக்குத்தாமே கோதபாய நியமனம் செய்திருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

என்னைத் தெரிவு செய்தவர்கள் சிங்கள பௌத்தவர்களே என்று இறுமாப்புடன் தெரிவித்த கோதபாய, தமது பதவியேற்புக்கான இடமாக அனுராதபுரத்தின் பிரதான பௌத்த விகாரையைத் தெரிந்தெடுத்ததையும், தம்மை எல்லாளனைக் கொலை செய்த துட்டகெமுனுவாக அடையாளப்படுத்தியதையும் அவரது வளர்கால நிகழ்ச்சி நிரலின் குறியீடாகவே பார்க்க வேண்டும்.

தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் நிகழ்வில் முன்வரிசையில் கோதபாயவுடன் பௌத்த பிக்குகளுக்கே இடமளிக்கப்பட்டது. அதேபோன்று அவரது பதவியேற்பு வைபவத்திலும் பிக்குகள் பட்டாளம் ஒன்று அமர்த்தப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் நடைபெற்ற இவ்வாறான அரச வைபவங்களில் ஆகக்குறைந்தது சர்வதேச சமூகத்தின் பார்வைக்காகவாவது இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதப்பிரமுகர்கள் அழைக்கப்பட்டு உரிய ஆசனத்தில் அமர வைப்பது வழக்கமாகவிருந்தது.

ஆனால், கோதபாயபின் அதிகாரபூர்வ வைபவங்களில் இது கடைப்பிடிக்கப்படவில்லை. ஆரம்பத்திலேயே இது சிங்கள பௌத்த தேசத்துக்கான நிகழ்வுகள் என்பதை அவர் அடையாளம் காட்டியுள்ளார்.

'எனக்கு வாக்களிக்குமாறு தமிழர்களையும் முஸ்லிம்களையும் வேண்டினேன். ஆனால் அவர்கள் எனது கோரிக்கையை நிராகரித்துவிட்டனர். சிங்கள மக்களின் வாக்குகளே என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது. ஆயினும் எனக்கு வாக்களிக்காதவர்களையும் இலங்கையர்களாக மதித்து நான் பணிபுரிவேன்" என்று பதவியேற்பின்போது உறுதியளித்த கோதபாய, நடைமுறையில் மற்றைய மதங்களை உதாசீனம் செய்து நடந்து கொண்டது அவரது உடலில் தெறிக்கும்; இராணுவ இரத்தத்தை தெரிய வைக்கிறது.

தமது தந்தையான டி.ஏ. ராஜபக்ச நினைவுமண்டபம் கட்டுவதற்கு 33.9 மில்லியன் ரூபாவை அரச நிதியில் மோசடி செய்த வழக்கை எதிர்கொண்டிருந்த கோதபாய, கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இப்போது ஜனாதிபதியாகி விட்டதால் அவருக்கு சட்டபூர்வமாக வழக்குகளிலிருந்து விலக்களிக்கப்படும் நியமத்தின் கீழ் விடுதலை வழங்கப்பட்டடது நீதிக்கு உட்பட்டதா என்ற கேள்வி பலரிடம் மௌனமாக எழுந்துள்ளது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் அவரது நிதியமைச்சின் செயலாளராகவிருந்து பல பில்லியன் ரூபாக்கள் மோசடியில் குற்றவாளியாகக் காணப்பட்டு பதவிகள் பறிக்கப்பட்டபின் சிங்கப்பூருக்கு தப்பியோடிய பி.பி.ஜெயசுந்தர, இப்போது மீள அழைக்கப்பட்டு கோதபாயவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலக பிரதான அதிகாரியாகவிருந்த காமினி சேனரட்ண சமகாலத்தில் மக்கள் வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவராகவிருந்து 11.5 பில்லியன் ரூபா மோசடியில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அந்த வழக்குகள் இன்னும் முடிவடையாத நிலையில் இப்போது பிரதமராகப் பதவியேற்றுள்ள மகிந்தவின் செயலாளராகப் பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு மீண்டும் பதவியேற்ற இன்னொருவர் பல மோசடிகளில் பிடிபட்டு பதவியிழந்திருந்த ஆட்டிகல என்பவர். இந்த நியமனங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆங்கில ஊடகமொன்று, பழைய கொள்ளையர் மீண்டும் வருகின்றனர் (ழுடன உசழழமள யசந உழஅiபெ டியஉம) என்று எழுதியுள்ளது.

மகிந்த ஆட்சிக்கால கொள்ளைகள் மற்றும் மோசடிகள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவின் தலைமைப் பொலிஸ் அதிகாரியான சானி அபேசேகரவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கோதபாய பதவி நீக்கம் செய்துள்ளார். புதிய ஜனாதிபதியின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக இதனைக் கொள்ளலாம்.

இலங்கையின் தேசிய கீதம் இனிமேல் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்பட வேண்டுமென கோதபாய உத்தரவிட்டதாக ஒரு செய்தி வெளியானது. இதற்குப் பலத்த கண்டனம் கிளம்ப, மறுகணமே அப்படியொரு உத்தரவையும் கோதபாய பிறப்பிக்கவில்லையென அடுத்த செய்தி வ்நதது.

இதுதான் மகிந்த பாணி. பிரச்சனைக்குரிய விடயங்களை ஊடகங்களுக்கு மெதுவாகக் கசிய விட்டுப்பார்ப்பார்கள். அதற்கு எதிர்ப்புக் கிளம்பினால் அப்படியாக எதுவும் தீர்மானிக்கப்படவில்லையென்று அறிக்கை வாயிலாகத் தெரிவித்து தப்பி விடுவார்கள். தேசிய கீதம் விடயத்திலும் இதுதான் நடந்திருக்கிறது போலும்.

தற்போதைய அரசியல் நிலைவரத்தை இனி நோக்கலாம். கோதபாயவையும் மகிந்தவையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியதையடுத்து ரணில் விக்கிரமசிங்க தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தமக்கு எதிராக சஜித் குழுவினர் தலைமைப் பதவியைப் பறிக்க ஆரம்பித்த புதிய நடவடிக்கைக்கு இதுவே அவருக்கு சுலபமான வழியாகவிருந்தது.

ரணிலின் ராஜினாமாவைத் தொடர்ந்து இடைக்காலப் பிரதமராக தமது அண்ணர் மகிந்தவை கோதபாய நியமித்துள்ளார். 1994இல் ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா குமாரதுங்க முதல் நான்காண்டு காலத்துக்கு பிரதமராக தமது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கவை நியமித்ததை இப்போது நினைவிற் கொள்ளலாம்.

22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் இடைக்கால அமைச்சரவை ஜனாதிபதி கோதபாய முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி தற்போதைய நாடாளுமன்றத்தின் முதல் நான்கரை வருடங்கள் முடியும்போது அது கலைக்கப்பட்டு அடுத்த பொதுத்தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதுவரை இடைக்கால எதிர்க்கட்சித் தலைவராக ரணில் பதவியேற்கும் வாய்ப்புண்டு. கட்சித் தலைவர் பதவியை தக்க வைத்துக் கொண்டால் ஆட்சியிலிருந்தால் பிரதமர் பதவி, ஆட்சியிழந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற சூத்திரம் ரணிலுக்குத் தெரியுமென இப்பத்தியில் சில வாரங்களுக்கு முன்னர் நான் குறிப்பிட்டது ஞாபகமிருக்கலாம். எனினும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித்துக்கு பெற்றுக்கொடுக்க உட்கட்சிப் போராட்டம் நடைபெறுவதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இறுதியில், இத்தேர்தலின் வாக்களிப்பின்போது இலங்கைத் தேசம் இரு துருவங்களாக மாற்றம் பெற்றதை கவனிக்க வேண்டும். வடக்கு கிழக்கின் ஐந்து மாவட்டங்களிலும் சஜித்தே வெற்றி பெற்றார். ஆறாவது மாவட்டமாக நுவரெலியா சஜித்துக்கு கை கொடுத்தது. (1982ஆம் ஆண்டின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலின்போது நுவரெலியா மாவட்டத்திலேயே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதிகூடிய வாக்குகள் பெற்றதை இவ்வேளை நினைவு கூருவது பொருத்தமானது). மிகுதிப் பதினாறு மாவட்டங்களிலும் கோதபாயவே அமோக வெற்றி பெற்றார்.

வன்னி யுத்தக் காயத்திலிருந்தும் அதன் வலியிலிருந்தும் தமிழ் மக்கள் இன்னமும் ஆறவில்லையென்பதை இத்தேர்தலின் வாக்களிப்பினூடாக தமிழர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். சஜித்துக்கு வாக்களிக்குமாறு கூட்டமைப்பு வேண்டியிருக்காவிடினும், தமிழ் மக்கள் கோதபாய தோற்கடிக்கப்பட வேண்டுமென்பதற்காக சஜித்துக்கே வாக்களித்திருப்பர் என்பதே யதார்த்தம்.

இந்த வாக்களிப்பு தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கும் ஒரு பகுதி முக்கியமானது:

'தங்கள் உரிமைகள் தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் உறுதியாக இருப்பதை ஒன்றுபட்டு இலங்கை ஆட்சியாளருக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஒரு செய்தியாக தங்கள் வாக்குகள் வாயிலாகத் தெரிவித்துள்ளனர்" என்ற சம்பந்தனின் கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.

ஆனால், இங்கு மனதை உறுத்தும் ஒரு விடயமுண்டு. தனக்கு வாக்களித்த சிங்கள பௌத்த மக்களுக்கு பகிரங்கமாக கோதபாய நன்றி கூறியது போன்று, அதிகூடிய வாக்குகளை தமக்கு அள்ளிக்கொட்டிய தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சஜித் பிரேமதாச நன்றி கூறாது மௌனம் காப்பதன் மர்மம் என்ன?

கோதபாயவை தோற்கடிக்க வேண்டுமென்றே இவர்கள் தனக்கு வாக்களித்தபடியால், எதற்காக இவர்களுக்கு நன்றிகூற வேண்டுமென நினைக்கிறாரா இந்த நன்றிகெட்ட அரசியல்வாதி? அரசியல் என்றால் இதுதான் போலும்! ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk


## ஈலிங் கனக துர்க்கை ஆலயத்தில் இந்து இளைஞர் பேரவை மார்கழி உற்சவம்

லண்டனைத் தலைமையகமாக் கொண்டு இயங்கும் சர்வதேச இந்து இளைஞர் பேரவை 'மார்கழி உற்சவம்' நிகழ்வை 15.12.2019 சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 7 மணி வரை ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் நடாத்துகிறது. இவ்வாண்டு 6வது ஆண்டாக இந்தாண்டும் 'மார்கழி உற்சவம்' நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஸ்தாபகர் இலக்கிய கலைமணி சி.கணேஷ்குமார். அன்புடன் அழைக்கிறார்.

தொடர்புகளுக்கு :
07411354315 / 07473619396/ 07438898805.


Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER
183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com


## சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் மாநாடு 2020

சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் மாநாடு பங்குனித் திங்கள் 2020ல் லண்டனில் நடைபெறவுள்ளது. ஊடகத்துறையில் பங்காற்றுபவர்கள் மாநாட்டில் கலந்த கொள்ள அன்புடன் அழைக்கப்படுகின்றனர். பங்குபெற்ற விரும்புவோர் விபரத்திரட்டிற்கு விண்ணப்பிக்கவும்

Thamilini News Paper,
90 High Street, colliers Wood,
London Sw19 2BT - United Kingdow.
Tel: 0044 208 542 8222
Fax: 0044 208 542 8666

## 'புதினம்' விடுமுறை

ஜனவரி 2020 இதழ் வெளிவராது. 'புதினம்' அலுவலகத்துக்க விடுமுறை விடப்பட்டுள்ளதால், ஜனவரி 2020 இதழ் வெளிவரமாட்டாது. பிப்ரவரி 2020 முதல் 'புதினம்' இதழ் தொடர்ந்து வெளிவரும் என்பதை வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.


# உதவியாளர் தேவை

**வயதான தமிழ்த் தம்பதிகளுக்கு வீட்டுப்பணிக்கு உதவி தேவை.**

வீடு சுத்தம் செய்ய, அவர்களுக்குத் தேவையான சிறு சமையல் செய்ய, வேண்டியபோது துணிகள் மினுக்குவது போன்ற வேலைகள் செய்ய உதவியாளர் தேவை சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.



தொடர்பு கொள்ள
01737355858

HELP REQUIRED FOR SRI LANKAN COUPLE
Work includes cleaning, Light cooking and occasional ironing...

Please Call : 01737355858


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

DECEMBER- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 02 | Monday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| | | Karthikai Somavaram - 3 | கார்த்திகை சோமவாரம் - 3 |
| 02 | Saturday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 09 | Monday | Prathosa Viratham Karthikai Somavaram - 4 | பிரசோச விரதம்,கார்த்திகை சோமவாரம்-4 |
| 10 | Tuesday | Thirukkarthikai Viratham Sokkappanai | திருக்கார்த்திகை விரதம்,சொக்கப்பானை |
| | | Kumaralaya Theepam Eve:Srisanmugar Veethi Ula | குமாராலய தீபம், ஸ்ரீ சண்முகர் வீதி உலா |
| 11 | Wednesday | Full Moon, Saravaalaya Theepam | பூரணை, சர்வாலய தீபம் |
| 12 | Thursday | Vinayagar Viratham Starts | விநாயகர் விரதம் தொடக்கம் |
| 15 | Sunday | Sankadahara Sathurthi | சங்கடஹர சதுர்த்தி |
| 17 | Tuesday | Apara Padcha Sasti | அவரபக்க சஷ்டி |
| 19 | Thursday | Apara Padcha Sasti | அவரபக்க சஷ்டி |
| 21 | Saturday | Children Competition | சிறார்கள் போட்டி |
| 22 | Sunday | Ehathasi Viratham, Thiruvasaga Vizha | ஏகாதசி விரதம், திருவாசக விழா |
| 23 | Monday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 25 | Wednesday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| 29 | Sunday | Sathurthi Viratham | சதுர்த்தி விரதம் |
| 31 | Thesday | Vinayagar Sasti Viratham, 108 Sankabishekam | விநாயகர் சஷ்டி விரதம், 108 சங்காபிசேகம் |
| | | Sri Vinayagar Veethi Ula | ஸ்ரீ விநாயகர் வீதியுலா |

# விமலின் பக்கம்



1960–களில் ஒரு நாள்.

கொழும்பு வெள்ளவத்தை சந்தை காவல் நிலையம் ஆகியவை அமைந்துள்ள காலி வீதி, நடைபாதை ஓரத்து வியாபாரிகளினால் நடைபாதை சுவீகரிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் நல்லூர் திருவிழாக் காலத்து வீதிகள் போல நெரிபட்டு இடிபட்டு தமக்கு வேண்டியதை வாங்குகிறார்கள். பள்ளி நேரம் முடிவடைந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்த என் கண்களில் ஒரு குறிப்பிட்ட நடைபாதை வர்த்தகர் கண்ணில் படுகிறார்;.



கொழும்பு நடைபாதை வியாபாரிகளினால் தெருவில் நடக்கும் மக்கள் !

தலையில் மடித்துக் கட்டப்பட்ட கைக்குட்டை - இடுப்பில் வண்ண வண்ண லுங்கி வாயில் சரளமாகப் புகுந்து விளையாடும் சிங்கள மொழி. அவனைச் சுற்றி அவையோர் சுமார் 25 பேர்! என்னதான் பேசுகிறார் எனக் கேட்போமே என்ற அவாவில் நானும் கழுத்தை நுழைத்துப் பார்க்கிறேன். (பள்ளி மாணவப் பருவத்தில் வழக்கமாகக் காணப்படும் துடிதுடிப்பு!

சிறு வயது முதல் சிங்களக் கிராமங்களிலும் கொழும்பிலும் வாழ்ந்த எனக்கு அவனது சிங்கள மொழிப் பிரசங்கம் நன்றாகப் புரிந்தது. பிரசங்கத்தின் இடையிடையே வடிவேலு பாணி காமடியும் இருந்தது!

மன்னிக்கவும் - 1960-ல் வடிவேலு இல்லை› சாரங்கபாணி› பிரண்ட் ராமசாமி› சந்திரபாபு காமெடி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

வர்த்தகனின் பிரசங்கம் தொடர்கிறது –

'நாங்கள் இரவில் தூங்கும்போது எங்கள் வாயில் நஞ்சு ஊறுகிறது என்று நான் சொன்னால் நம்புவீர்களா? நம்பாவிட்டால் இரவில் தூங்கு முன் வாயில் சொற்ப அரிசியைப் போட்டுக் கொண்டு தூங்குங்கள். காலையில் எழுந்ததும் வாயில் இருந்த அரிசியை எடுத்து கோழிக்குப் போடுங்கள்! ஐயையோ உங்கள் கோழிகளுக்கு அல்ல! பக்கத்து வீட்டுக் கோழிகளுக்குப் போடுங்கள். (ஹாஹா! சிங்கள நகைச்சுவை!)



முகநூல் ஏக போக உரிமையாளர் உச்ச செல்வந்தர்களின் ஒருவர் மார்க்

'உங்கள் வாயில் ஊறிய நச்சுப் பொருள் கோழிகளின் கதையை முடித்து விடும்.' (இதைக்;;;;; கூறி விட்டு யாரோ பல் வைத்தியரிடம் தான் திருடிய வாய்ப் புண் புகைப்படங்களை பொதுமக்களுக்கு காட்டுகிறார்). இனித்தான் விஷயம் இருக்கிறது:-

'அந்த நச்சுப் பொருளை அழிக்க என் கிராமத்து பாட்டி ஒருத்தி தயாரித்த பற்பொடி இது!' என்று புழுகிவிட்டு கோபால் பற்பொடி போன்ற உறைகளில் தன் 'மருந்துப் பொருளை' விற்கிறான். முன் வரிசையில் நின்ற 4› 5 பேர் பணத்தை நீட்டி அவசர அவசரமாக அவனிடம் பொடிகளை வாங்குகிறார்கள்.

அந்த 4› 5 பேர் கூட அந்த நடைபாதை வர்த்தகன் நாட்டி வைத்த கைக்கூலிகள் என்பது எனக்கு அப்போது புரியவே இல்லை.

சுமார் 20 வருடங்கள் FF/FAST FORWARD BUTTON-ஐ அழுத்துகிறேன்!

1980-ம் ண்டு - இடம் உலகத் தலைநகர் இலண்டன்!

உலகப் புகழ் பெற்ற ஒக்ஸ்போர்ட் வீதி; - பல கடை வீதிகள் நிறைந்த அந்தத் தெருவில் நடந்து கொண்டிருக்கிறேன்.



முகநூலில் ஒரு விளம்பரம்

உலகெங்கும் இருந்து பல்லாயிரம் மக்கள் இலண்டனுக்கு வருவது, மகாராணியின் பக்கிங்ஹாம் அரண்மனையைப் பார்க்கவும் இந்த SEL FRIDGES கடையில் ஷொப்பிங் செய்யவும்தான். பல மாடிகளையும் ஒரு சினிமாத் தியேட்டரையும் கொண்ட இந்த நிறுவனம் உலகப் புகழ் பெற்றது.

1980-ல் நான் அந்தக் கடை வாசலில் ஒரு போலி வர்த்தகன் பொய்களை அடுக்கி போலிப் பொருள்களை விற்றுக் கொண்டிருப்பதைக் கண்டேன். வெள்ளவத்தையைப் போல இலண்டனிலும் போலி வர்த்தகனின் கைக்கூலிகள் தமது சகா விற்றுக் கொண்டிருக்கும் பொருளை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். இலண்டனில் நடைபாதையில் விற்கப்பட்டது வாசனைத் திரவியங்கள் போன்ற அழகான போத்தல்களில் அடைக்கப்பட்ட வண்ணக் கலவை நீர்.

பார்ப்பதற்கு உயர் ரக PERFUME போலத் தோற்றமளிக்கும் இந்த 'தண்ணீர் வியாபாரி' கூறுகிறான்

'இதன் உண்மையான விலை £40 நான் உங்களுக்குத் தருவது பத்தே பத்து பவுண்களுக்கு மட்டுமே!"

வியாபாரம் சூடு பிடிக்கிறது! ஆனாலும் வியாபாரி அவசர அவசரமாக மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்படுகிறான்! காரணம் அவன் கண்களில் ஒரு பிரிட்டிஷ் காவல் துறை அதிகாரி தென்பட்டதுதான்!

இப்படியாக 'பொய்' பேசி ஏமாற்றி காரியம் சாதிப்பது எல்லாக் காலத்திலும் எல்லா சமுகங்களிலும் நடந்து வருகிறது.

தன் மகளுக்கு மாப்பிள்ளை தேடும்படி ஒரு தரகரைக் கேட்கிறார் ஒரு தந்தை! 'ஒரு லண்டன் மாப்பிள்ளை இருக்கிறார் - ஆள் தங்கக் கம்பி' என்கிறார் தரகர். திருமணம் நடக்கிறது இலண்;டனுக்குப் போன மணமகள் லண்டன் வீட்டில் தன் கணவன் ஒரு இளைஞனுடன் 'கணவன் மனைவியாக' வாழ்ந்து வருவதை நேரில் கண்டு அதிர்ச்சி அடைந்து அழுதபடி இலங்கைக்கு பெற்றோரிடமே திரும்பி வருகிறாள்.




மக்கள் மனதை மயக்கியுள்ள முகநூல்

'தடி எடடா அந்தத் தரகரை அடிப்பம்!' என்று அந்த தந்தை பொங்குகிறார்.

'ஐயா› கோவிக்காதேயுங்கோ நான் அப்பவே சொன்னனான் மாப்பிள்ளை தங்கக் கம்பி எண்டு!'

தந்தையார் தலையில் கைவைத்து அழுகிறார்.

எந்தப் பொருளையும் விற்கும்போது பொய் சொல்லி விற்றால்› பொய் சொன்ன பற்பொடி வியாபாரியோ› வாசனைத் திரவிய வியாபாரியோ› கல்யாணத் தரகரோ பொய் சொல்லி வர்த்தகம் நடத்துவதைத் தடுக்க 1967-ல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

MISREPRESENTATION ACT - 1967 என்பது இதன் பெயர். இத்தோடு நுகர்வோர் பாதுகாப்புக்கான ஒரு சட்டம் திருத்தம் செய்யப்பட்டு புதிய சட்டம் 2014-ல் நடைமுறைக்கு வந்தது.

ஆனால் நான் இங்கு சொல்ல வருவது என்னவென்றால், இத்தனை பிரிட்டிஷ் சட்டங்களையும் மீறி› கண்களில் மண் தூவி விட்டு உலகின் மிகப் பெரும் செல்வந்த நிறுவனம் ஒன்று செயற்பட்டு வருகிறது!

அந்த நிறுவனம் FACE BOOK எனப்படும் முகநூல் நிறுவனம். அதன் உரிமையாளர் நீண்ட பெயர் கொண்ட :MARK என்றே குறிப்பிடுவோம்.

உங்கள் முகநூல் பக்கத்தைப் பார்வையிடும்போது நீங்கள் விரும்பியோ› விரும்பாமலோ (சன் ரிவி தொலைக்காட்சி போல) கவர்ச்சியான வண்ண விளம்பரங்கள் குறுக்கிட்டபடியே இருக்கும்! தயவுசெய்து அவற்றின் மாய வலையில் சிக்கி விடாதீர்கள். காரணம் அவை கூறுவது உண்மையே அல்ல.



இலண்டன் selfridges நிறுவனம்

முகநூலின் முகத் திரையைக் கிழிக்க வேண்டிய போலி விளம்பரங்களுக்கும் கொழும்பு பற்பொடி வியாபாரிக்கும் யாழ்ப்பாண தங்கக் கம்பி 'மாப்பிள்ளைக்கும் இந்த முகநூல் விளம்பரதாரர்களுக்கும் வித்தியாசமே இல்லை.

முகநூலில்; ஒரு மொபைல் கைபேசி விளம்பரத்தில் நீங்கள் அக்கறை காட்டியிருக்கலாம்! அதில் தவறே இல்லை. தாய்லாந்துக்கு விடுமுறை செல்வது பற்றி நீங்கள் விசாரித்திருக்கலாம். அதில் தவறே இல்லை.

உங்கள் ஈ-மெயில் முகவரிகளைத் திருடிக் கொண்டு உங்கள் மீது உளரீதியான தாக்குதல் நடத்துகின்றன இந்த முகநூல் விளம்பர நிறுவனங்கள்.

இந்த முகநூல் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க முகநூல் அதிபர் மார்க் தயக்கம் காட்டுகிறார். காரணம் இந்தப் போலி விளம்பரதாரர்களிடம் பணத்தைக் கொட்டி இழப்பது சிரமப்பட்டு உழைத்து பணத்தை சேமித்து வைத்துள்ள நாங்கள்தான்.

தமிழ்நாட்டில் 'சிட் பணம்' ஏமாற்றும் நிறுவனங்கள், பல கோடி வட்டி தருவதாகக் கூறி தமிழ் மக்களின் பணத்தைக் கொள்ளையிடுவது போல› 'கொழுத்த வட்டி தருகிறோம் - சிங்கப்பூர் விடுமுறை தருகிறோம் - மொபைல் போன் தருகிறோம்' என்றவாறு ஏமாற்றமளிக்கும் எதையுமே நீங்கள் நம்பாதீர்கள்! பெருந்தொகை பணத்தை இழப்பது நீங்கள்தான் - முகநூல் அதிபர் மார்க் அல்ல!!

இந்த தில்லுமுல்லுகளில் தலையிட காவல் துறையினரோ› நீதிமன்றங்களோ இன்னும் தயாரில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும்.

நண்பர்களுடன் உறவாட மட்டும் முகநூலைப் பயன்படுத்துங்கள் விளம்பரங்களில் மயங்கி பொருட்களை வாங்க முற்பட வேண்டாம்!

*wimalsockanathan@gmail.com*

இணுவை ச.சிறீரங்கன், சொ.கருணைலிங்கம்



# பாலைவனத்துப் பூக்கள்

எமது பயணம் இரு நோக்கங்களைக் கொண்டிருந்தன. எமது ஆலயம் தாயகத்தில், ஏற்கெனவே ஒத்துக்கொண்ட தர்மப்பணி நோக்கத்திற்குப் பணம் சரியான வழியில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைப் பரிசீலித்தல். மற்றது ஆலயத்தின் அறங்காவற்சபை, நிர்வாகசபை என்பன இணைந்து, எடுத்த தீர்மானங்களின்படி உதவிகளைக் கையளிப்பு செய்தல். இந்த வகையில் கிளிநொச்சியிலுள்ள மகாதேவ ஆச்சிரமத்திற்குச் சென்றோம். எங்களை வரவேற்ற தலைவர் திரு.பொன் நித்தியானந்தம் அவர்கள், மாகதேவ ஆச்சிரமம் மேற்கொண்டுள்ள திட்டங்களை விளக்கினார். இந்த ஆச்சிரமத்தை நிர்வகித்த முன்னாள் தலைவர், அமரர் இராசநாயகம் அவர்கள் வழிநடாத்தியதுபோல, இவரது தலைமையும் சிறப்பாக நடைபெற்றுவருவது மகிழ்ச்சியாக இருந்தது. மகாதேவ ஆச்சிரமத்தின்கீழ் வழிநடாத்தப்படும் சிறார்கள் வதியும் இடங்களை இவர் சுற்றிக் காண்பித்தார். வங்கிப் புத்தகங்களைக் காண்பித்தார். அதனைப் பரிசீலித்தால் எமது கொடுப்பனவுகளும், அதனைச் செலவு செய்த விபரமும் ஒழுங்காகப் பதியப்பட்டிருந்தன. இந்தச் சிறார் இல்லத்துக்கு அண்மித்ததாகவிருந்த இருபெரும் மகாத்மாக்களான வடிவேல் சாமியார், மகாதேவ சுவாமிகள் ஆகியோரின் ஜீவசமாதியில் வணக்கம் செலுத்தினோம். இந்த இருவரும் இல்லத்தின் தோற்றுவாய்க்கும், வளர்ச்சிக்கும் அரும்பெரும் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




இந்த வகையிலே மன்னார் அன்னை இல்லத்தினரால் வழிநடாத்தப்படும் அறநெறிப்பாடசாலையின் மாணாக்கராகிய சிறார்களையும் பார்வையிட்டோம். இப்பாடசாலையின் வழிபாட்டில் கலந்துகொண்டு, அதன் தலைவர் திரு.இராமகிருஷ்ணன், செயலாளர் திரு.பிருந்தாவனம் ஆகியோருடனும் அளவளாவினோம்.

வவுனியாவிலுள்ள அன்பகம், அகிலாண்டேஸ்வரி ஆகிய சிறுவர், சிறுமியர் பராமரிப்பு நிலையங்களுக்கும் சென்று, இல்லப்பொறுப்பாளர்களைச் சந்தித்து, உரையாடினோம். அவர்கள் செயற்பாடுகளையும் கவனித்தோம். வவுனியாவில் எமது ஆலயம் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வழங்கும் பசுப்பால் திட்டத்தையும் பார்வையிட்டோம். இப்பள்ளிக்கூடம் வவுனியா, இராசேந்திரன் குளம் என்னுமிடத்தில் அமைந்திருக்கிறது. இதனையடுத்து வவுனியா, தம்பனைச்சோலை என்னுமிடத்திலுள்ள பாடசாலைக்குச் சென்று, அங்கே சிறார்களுக்குப் பசுப்பால் வழங்கும் நிகழ்விலும் கலந்துகொண்டோம். இந்த இரு பாடசாலைகளிலும் படிக்கும் சிறுவர் சிறுமிகளின் பெற்றோர் மிக மிக ஏழைகள். இப்பிள்ளைகளின் பெற்றோர் தினக்கூலிக்கு வேலை செய்யும் மகா ஏழைகள் என்பதைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எமக்கு விளக்கினர்.

## விபுலானந்தச் சிறுவர் இல்லம்
## திருப்பழுகாமம், மட்டக்களப்பு

1990ல் ஏற்பட்ட அசாதாரண சூழலின் பின்பாக, திருப்பழுகாமத்தின் மக்கள் வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளானது. கணவனை இழந்த விதவைப் பெண்கள், பெற்றோரைப் பறிகொடுத்த சிறுவர்கள், வீடு வாசல்களை இழந்தவர்கள் எனப் பலதிறத்தார் இங்கே உருவானார்கள். இக்காணிப்பகுதி மிகவும் கவலையானதே! பாலைவனமாக மாறிக் கொண்டுவந்த திருப்பழுகாமம், 1991ல் ஒரு சிறு நல்ல உள்ளங்களின் கண்ணில்பட்டது. அனாதைப் பிள்ளைகளுடன் இதே வருடத்தில் அந்த நல் மனங்கொண்டோரால் ஆரம்பிக்கப்பட்டதே "விபுலானந்தச் சிறுவர் இல்லமே"யாகும். இந்த இல்லத்தை கனகதுர்க்கை அம்மன் ஆலய அடியார்களுடன் நாங்கள் பார்வையிட்டோம். நாங்கள் மட்டுமல்ல, வேறு ஆலயங்களும் இச்சிறுவர் இல்ல வளர்ச்சியில் பங்குகொண்டு, கைகொடுக்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற சிறுவர் இல்லங்கள் சோலைவனங்களாக மாறும். சுமார் 45 சிறுவர்களைத் தற்போது இந்த இல்லம் பராமரித்து வருகின்றது. இதுவரை 13 குழந்தைகள் மட்டுமே "காக்கும் கரங்கள்" என்ற ஆலயத் திட்டத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மிகுதிப் பிள்ளைகளையும் பராமரிக்க வேறு நலன்புரி அமைப்புகள், பிற ஆலயங்கள் என்பன கைகொடுத்து, உதவ வேண்டும்.



## விவேகானந்த கலைக்கல்லூரி

'உலகமயமாதல்' என்ற நிலைப்பாட்டில், கிராமங்கள் நகரங்களாகி, நகரங்கள் விசாலமாகி உலகமயமாக்கலுடன் இணைய வேண்டும். இதற்கு முன்னுதாரணமாகக் கிராமங்கள் தோறும் உள்ள பாடசாலைகள், பெரிதாக்கப்பட்டு, கணணி முறையான கல்வியறிவு பிள்ளைகளுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும். கணணியறிவை மாணாக்கர்களுக்குப் போதிக்க வேண்டிய சாதனங்கள் இக்கல்லூரியில் இல்லை. இது அரசாங்கப் பாடசாலையுமல்ல.

"புத்தம் புதிய கலைகள்- பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே- அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை சொல்லவும் கூடுவதில்லை- அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை" என்ற புரட்சிக்கவி பாரதியின் கூற்றினை எமது ஆலயம் நன்கே உள்வாங்கியபடியால், இக்கல்லூரிக்கு கணணி உபகரணங்களை வாங்க, பெரும் தொகைப்பணம் எமது அடியார்களால் காணிக்கையாக வழங்கப்பட்டுள்ளது.

சமூசேவையாளரான திரு.சற்குணேஸ்வரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்த கலைக்கல்லூரி, இப்போது, அம்மன் ஆலய அடியார்களால் அளிக்கப்பட்ட காணிக்கையின் உதவியுடன் கணணிகளை வாங்கி, அதனுடன் இணைந்த கணணிக் கல்லூரிக்கு "கனகதுர்க்கை அம்மன் சமுதாயக் கல்லூரி" என்று பெயரிட்டுள்ளது. இந்த சமுதாயக் கல்லூரியானது வந்தாறுமூலையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் திறப்புவிழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், மட்டு அரச அதிபர் திரு. உதயகுமார் ஆகியோரும், ஆலய அடியார்கள் சிலரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இக்கல்லூரித் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்று, முடிந்ததும் நாங்கள் அனைவரும் திருப்பழுகாமம் என்ற இடத்திலுள்ள 'திலகவதியார்' இல்லத்திற்கு விஜயம் செய்தோம். திரு.பிரதீஸ் என்ற அன்பர் இந்த இல்லத்தை திறம்பட நடாத்தி வருகிறார். ஆதரவற்ற பிள்ளைகள் இங்கு தங்கி, உணவு, உறைவிடம் என்பவற்றோடு, கல்வி அறிவும் பெற்று வருகின்றனர். இப்பிள்ளைகள் பயிற்சி பெற்ற ஆசிரியைகளால் வழிநடாத்தப்படுகின்றனர். திலகவதியார் இல்லமே கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினால், கிழக்கு மாகாணத்திலே முதல்முதலாக பராமரிப்புச் செலவினைப் பெற்ற இல்லமாகும். இந்த இல்லத்தின் பராமரிப்புச் செலவை எங்கள் ஆலயம் சில வருடங்களாகவே செய்து வருகின்றது. இங்கேயுள்ள ஆசிரியைகள், திலகவதியாரின் இல்லத்திலே தங்கியுள்ள உயர்வகுப்பு மாணவிகள், மிக அமைதியாய் இருந்து படிப்பதற்கு, தனியாக ஓர் கட்டிடம் கட்டித்தரும்படி கோரிக்கை விடுத்தனர். இதனைச் செவிமடுத்த, எமது ஆலய அடியார் திருமதி ஆனந்தி அவர்கள், அதற்குரிய முழுச்செலவையும் தானும், தனது குடும்பமும் பொறுப்பெடுப்பதாகக் கூறி, உடனே சம்மதம் தெரிவித்தார். திலகவதியார் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகின்றது.

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க




Sky Wings Travel
SW
25
Your Travel Is Our Passion...
Early Bird Offers
Call Us for Easter Special Offers
Book now and Pay Later. Hurry! Limited Availability.
WORLDWIDE SPECIALS
MELBOURNE Fr £588
AUCKLAND Fr £420
NEW YORK Fr £380
SYDNEY Fr £591
TORONTO Fr £344
CHENNAI Fr £377
TRICHY Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
SECURE YOUR BOOKING
WITH A DEPOSIT OF £150.00
SriLankan Airlines £506
Emirates £489
QATAR AIRWAYS £485
119 Tooting High Street, London, SW17 0SY
IATA
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
5766 ATOL PROTECTED






# பிரெக்ஸிட்

## டிசம்பர் 12 இங்கிலாந்து தேர்தல் மாற்றத்தை கொண்டு வருமா?



சக்தி சக்திதாசன்

ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சி தனது பெரும்பான்மைப் பலத்தை இழந்து, பாராளுமன்றம் செயலிழந்து, ஒரு முடக்க நிலையில் அல்லாடியது.

பிரெக்ஸிட் எனும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தினாலொழிய நாட்டில் மக்களின் அன்றாட பிரச்சனைகளை தீர்க்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டது.

பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் அவரைச் சார்ந்தவர்களும் பலவழிகளில் பல சாணக்கிய யுக்திகளைக் கையாண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர முயன்றும் எதிர்க்கட்சிகளின் கூட்டான நடவடிக்கையால் எதுவும் பலனளிக்காது போனது.

அக்டோபர் 31ம் தேதியோடு இந்த பிரெக்ஸிட் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன் என்பதையே திரும்பத் திரும்பக் கூறி வந்த பிரதமர் போரிஸ் ஜோன்சன் வேறுவழியின்றி ஐக்கிய இராச்சியத்தால் கொடுக்கப்பட்ட காலக்கெடுவை ஏற்று பிரெக்ஸிட்டுக்கான தேதியை 2020 ஜனவரி 31ம் தேதி வரை தள்ளிப்போட வேண்டியதாயிற்று.

இந்த முடக்கநிலை மாற வேண்டுமானால் ஒரு பொதுத் தேர்தலின் மூலம் அறுதிப் பெரும்பான்மை பெற்றாலொழிய வேறு வழியில்லை எனும் நிலைக்கு பிரதமர் தள்ளப்பட்டார். உடன்படிக்கையற்ற ஒரு பிரெக்ஸிட்டுக்கு வழியில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட பிரதான எதிர்க்கட்சியான லேபர் கட்சி தேர்தலுக்கு உடன்பட்டது. லேபர் கட்சியின் ஆதரவு தேர்தலில் பெரும்பான்மை பெறும் அளவுக்கு பெரிதாக இல்லை என்று கருத்துக்கணிப்புகள் கூறும் வேளையில் தேர்தலுக்கு அவர்கள் உடன்படக் காரணம் என்ன?

மற்றைய எதிர்க்கட்சிகளான ஸ்கொட்லாந்து தேசிய கட்சியும், லிபரல் டெமகிரட்ஸ் கட்சியும் தாம் தேர்தலுக்குத் தயார் என்று அறிவித்ததைத் தொடர்ந்து லேபர் கட்சி இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. வேறுவழியின்றியே அவர்களும் பொதுத்தேர்தலுக்கு உடன்பட்டார்கள் என்றே கூற வேண்டும்.

டிசம்பர் மாதம் மிகவும் குளிரான மாதம். அதைத்தவிர மக்கள் அனைவரும் ஐக்கிய இராச்சியத்தின் முக்கிய தேசிய விழாக்காலமான கிறிஸ்மஸ் பண்டிகையை நோக்கி ஆயத்தங்களைச் செய்யும் வேளை. இந்த வேளையில் தேர்தலா?

கடைசியாக டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடந்தது 1923ம் ஆண்டு. அத்தேர்தல் கூட கன்சர்வேடிவ் கட்சிக்கு ஒரு சிக்கலான தேர்தலாகவே அமைந்தது. அத்தேர்தலில் அப்போதைய கன்சர்வேடிவ் கட்சி தமது வசமிருந்த 86 தொகுதிகளில் தோல்வியடைந்து சிக்கலுக்குள்ளாகியது.

அதேபோன்று, வருகின்ற டிசம்பர் மாதம் 12ம் திகதி இங்கிலாந்தின் பொதுத்தேர்தல். இதுகூட கன்சர்வேடிவ் கட்சியின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது மட்டுமில்லாமல், ஐக்கிய இராச்சியத்தின் எதிர்காலத்தை வரையறுக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகவே கருதப்படுகிறது.

இத்தேர்தலின் முடிவினை நிர்ணயிக்கப்போகும் கட்சிகள் கன்சர்வேடிவ், லேபர், லிபரல் டெமகிரட்ஸ், பிரெக்ஸிட் கட்சி மற்றும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி என்பனவேயாகும். இது தவிர மற்ற கட்சிகள் போட்டியிட்டாலும், அவைகளின் தாக்கம் தேர்தல் முடிவுகளைப் பாதிக்காது.

இத்தேர்தலில் கட்சிகள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சனை பிரெக்ஸிட். இவைகளில் கன்சர்வேடிவ் கட்சியும், பிரெக்ஸிட் கட்சியும் மட்டுமே பிரெக்ஸிட்டின் நிச்சயமான ஆதரவாளர்கள். லேபர் கட்சி தாம் மற்றொரு உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்டு விட்டு அவ்வுடன்படிக்கையை ஆதரிக்கிறீர்களா? இல்லையேல் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிலைபெறப் போகிறீர்களா எனும் கேள்விகளை உள்ளடக்கிய மற்றுமொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாகக் கூறுகிறார்கள். லிபரல் டெமகிரட்ஸ், மற்றைய கட்சிகள் பிரெக்ஸிட்டுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. மிகவும் தீவிரமான பிரச்சாரம் சகல கட்சிகளினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் தெரிவு செய்யப்படுவது அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு. பிரெக்ஸிட்டுக்கு அப்பால் இந்தநாடு எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு யார் சரியான தீர்வுகளை முன்னெடுக்கப் போகிறார்கள் என்பதை மக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்களா? என்பதுவே எழக்கூடிய கேள்வி.

நாட்டின் 52 வீதமானோர் பிரெக்ஸிட்டை ஆதரித்தார்கள் எனும் அடிப்படையில் பிரெக்ஸிட் ஒன்றையே கன்சர்வேடிவ் கட்சியினர் முன்னிலைப்படுத்துகிறார்கள். ஆனால், லேபர் கட்சி ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார சேவையில் இருக்கும் குறைபாடுகளை முன்னிலைப்படுத்துகிறார்கள்.

லேபர் கட்சிக்கு ஆதரவான தொழிலாளர் நிறைந்த இங்கிலாந்தின் வட பகுதித் தொகுதிகள் பல பிரெக்ஸிட்டுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. இவர்களின் ஆதரவைத் தாம் பெற்று விடலாம் என்று கன்சர்வேடிவ் கட்சியினர் முனைகிறார்கள். ஆனால், அதே தொகுதிகளில் பிரெக்ஸிட் கட்சியும் போட்டியிட்டால் வாக்குப் பிரிந்து விடும் எனும் கருத்து நிலவுகிறது.

பிரெக்ஸிட் கட்சியின் மீது விழுந்த அழுத்தம் காரணமாக அவர்களின் தலைவர் நைஜல், கன்சர்வேடிவ் கட்சியுடன் எந்த உடன்படிக்கையும் இல்லாமல் கடந்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளில் தமது வேட்பாளர்கள் நிற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். இதனால் பிரெக்ஸிட்டுக்கான வாக்குகள் பிரிந்து லேபர் கட்சி வெற்றிபெறக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கை என்றும் கூறியுள்ளார்.

அடுக்கடுக்காக மக்களைக் கவரும் பல அதிரடியான கொள்கைப் பிரகடனங்களை அள்ளி வீசுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் ஜெர்மி கோர்பன். அவரது இந்த அறிவித்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவருக்கு எங்கிருந்து பணம் கொட்டப் போகிறது என்று அரசாங்கத் தரப்பு கட்சியினர் கேள்விகளைத் தொடுக்கிறார்கள். ஆனால், அதே அரசாங்கத் தரப்பினர் பொருளாதாரக் கொள்கையில் தம்மைப் போல சிக்கனமிக்கவர்கள் இல்லை என்று மார்தட்டிக் கொள்ளும் அதேநேரம் தாமும் பல அதிரடியான புதிய செலவுமிக்க கொள்கைப் பிரகடனங்களைச் செய்கிறார்கள்.

இதனிடையே இதுவரை பெரிய அளவிலான ஆதரவு பெறாத கட்சியான லிபரல் டெமகிரட்ஸ் கட்சியின் புதிய தலைவியான ஜோ ஸ்வென்சன், தனக்குக்கூட பிரதமராகும் வாய்ப்பிருக்கிறது எனும் பாணியில் பேசிவருகிறார். பிரெக்ஸிட்டை ரத்துச் செய்வேன் என்று வெளிப்படையாகக்கூறும் தமது கொள்கைக்கு அமோகமான ஆதரவு கிடைக்கும் என்பது இவரது நம்பிக்கை.

பிரெக்ஸிட் ஒன்றையே தமது கொள்கையாகக் கொண்ட பிரெக்ஸிட் கட்சி இந்த பிரெக்ஸிட்டுக்கு எதிரான கட்சிகளுக்கு அதிக தொகுதிகளைக் கைப்பற்றும் சந்தர்ப்பத்தை இல்லாமல் பண்ணுவதே தமது நோக்கம் எனும் வகையில் பிரச்சாரம் செய்கிறார்கள்.

ஸ்கொட்லாந்து தனிப்பட்ட பிரச்சனையை எதிர்நோக்குகிறது. ஸ்கொட்லாந்தினை வழிநடத்தும் மாநில அரசுக் கட்டிலில் ஸ்கொட்லாந்துக்கு பிரிவனை கோரும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியே அமர்ந்திருக்கிறது. 2016ல் நடந்த பிரெக்ஸிட் சர்வஜன வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்து பெரும்பான்மையாக பிரெக்ஸிட்டுக்கு எதிரான வகையில் வாக்களித்திருந்தது. தற்போது ஐக்கிய இராச்சியத்தின் அங்கமாக ஸ்கொட்லாந்து இருப்பதால் அவர்களும் பிரெக்ஸிட்டுக்குள் அகப்பட்டுக்கொள்கிறார்கள். இது எவ்வகையில் ஜனநாயகமாகும் எனக் கேள்வி எழுப்பி தாம் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிய வேண்டும், அதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட வேண்டும், அதை நிரூபிக்கும் வகையில் தமது கட்சிக்கு ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதே அவர்களது பிரச்சாரம்.

இத்தேர்தலில் போட்டியிடும் அனைத்துக்கட்சிகளும் வெளிநாட்டவர் ஐக்கிய இராச்சியத்தில் குடியேறுவதற்கு கட்டுப்பாடுகளைக் கொண்டு வரவேண்டும் என்று கூறும் அதேவேளையில் ஐக்கிய இராச்சியத்தில் சிலவகையான பணிகளாற்றுவோரின் தட்டுப்பாட்டினையும் கையாள வேண்டும் என்பதற்கேற்ப வித்தியாசமான தமது நிலைப்பாடுகளைக் கூறிவருகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பையே தமது பிரதான கொள்கையாகக் கொண்ட கிறீன் கட்சி, உலகின் காலநிலைச் சீர்கேட்டைத் தடுக்கும் வகையில் தமது கட்சி திட்டங்களை முன்னெடுக்கும் என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

இந்த பிரெக்ஸிட் எனும் சிக்கலான பாலத்தைக் கடந்து பிளவுபட்டிருக்கும் ஐக்கிய இராச்சியத்தை ஒன்றுபடுத்தக்கூடிய வகையில் நாட்டினை யார் நிர்வகிக்கக் கூடியவர்கள் என்பது மக்களின் கணிப்பில் எப்படி இருக்கப் போகிறது என்பதனை டிசம்பர் 13ம் திகதி எங்களுக்கு அறிவிக்கப் போகிறது.

**"இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு**
**அந்த மாறுதலைக் கொண்டுவர தேர்தல் உண்டு"**

எனும் பாடல் வரிகள் தான் ஞாபகத்திற்கு வருகிறது. அம்மாறுதலை இத்தேர்தல் கொண்டு வருமா?



ப.வை. ஜெயபாலன்

# பிரித்தானியாவில் அழியும் தமிழின அடையாளங்கள்



முந்தையர் வழியாக சந்ததித் தொடராக எங்களில் இணைந்த தமிழர் என்ற அடையாளம் புலம் பெயர் நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவில் நிலைக்குமா? என்ற ஏக்கம் எழுகின்றது. அதிகரிக்கும் கலப்பின திருமணங்கள், தமிழ்மொழியே எழுதப் பேச தெரியாதவர்களாக வளரும் எம் சந்ததி, இறைவழிபாட்டில் இழந்துவரும் ஆர்வம் எனச் சில காரணங்கள் இந்த அபாயத்தை உணர்த்துவதாக உள்ளன.

மொறிசியஸ் தமிழர்களின் இன்றைய நிலை இதற்கு நல்ல உதாரணம். 1615ம் ஆண்டு பாண்டிச்சேரியும், மொறிசியஸ் தீவும் பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந்த காலம். பாண்டிச்சேரியில் இருந்து இராமசாமி என்ற தமிழர் மொறிசியஸ் நாட்டுக்கு, வளமான வாழ்வை எதிர்பார்த்து புலம்பெயர்ந்தார். அவரது வாழ்வு வசதிகளால் உயர்ந்தது. எழில்மயமான எதிர்காலம் மொறிசியசில் உண்டு என்பதை அவரது உறவினர், ஊரார், அயலார் உணர்ந்தார்கள். புலம் பெயர்ந்தார்கள். அங்கேயே நிலையானார்கள். நானூறு ஆண்டுகளை கடந்த நிலை, சந்ததிகள் தமிழ் மொழியை அறியாதவர்கள் ஆகியுள்ள நிலை. ஆயினும் அவர்கள் தம் இன அடையாளமாக அழகிய தமிழ்ப் பெயர்களை வைப்பதில் இன்றும் ஆர்வம் கொண்டுள்ளனர். அரசன், இராமலிங்கம், ஜெயமணி, வள்ளி என்பன சில உதாரணம். தீவிர சமயபக்தியும் இன்னும் அவர்களிடம் உண்டு. விழாக்களில் கலாசார உடைகளையும் அணிகிறார்கள்.

இவர்களோடு ஒப்பிடும்போது இலங்கை தமிழர்கள் பெயரை கூட தமிழ் அடையாளத்துடன் வைக்கத் தயாரில்லை. குறிப்பாக இங்கிலாந்தில் இளம் சந்ததியினர் சிலருக்கு தமிழ் பேச, எழுத தெரியாது. மொழி அழிவதாக, 30 ஆண்டு உக்கிர யுத்தத்தில் இழப்புகளை கண்டு, இடம் பெயர்ந்த நாம் எங்கே போகிறோம்?

தமிழ் பள்ளிகள், ஊர் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் பல தம் நிகழ்ச்சிகளை ஆங்கிலத்திலேயே நடாத்துகின்றன. அரங்கேற்றங்கள், ஆலயங்களில் அறிவிப்புக்களும் ஆங்கிலத்தில்தான். எமது பெற்றோர், தமிழ்பள்ளி நேரத்தில் பிள்ளைகளை விளையாட்டுப் பயிற்சிக்கு அல்லது பிரத்தியேக பாடசாலை பாட வகுப்புக்கு அனுப்புவதற்கே முன் உரிமை தருகின்றார்கள். சந்ததிகளிடையே எம் தமிழ்மொழி எப்படி வளரும்?

அதிக நேரத்தை பிள்ளைகள் ஆங்கில நண்பர்களுடன் கழிக்க வேண்டிய பள்ளி கல்வி சூழல். எஞ்சிய நேரத்தில் அவர்களை பிள்ளைகளாக அல்லாது, பல்துறை வல்லுனர் ஆக்குவதே தமிழ்ப் பெற்றோர்களின் ஆசையாக உள்ளது. பரதம், சங்கீதம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், தபேலா, வாய்பாட்டு, கராட்டி, கிறிக்கற், உதைபந்து, பற்மின்ரன், ரெனிஸ் என்று எத்தனை உண்டோ அத்தனையிலும் முன்னுக்கு ஏறும் பிள்ளைகளை தள்ளாத பெற்றோர் இல்லை எனலாம். ஆக அத்தியாய தேவையான தமிழ் மொழி பாடத்தில் பிள்ளை தன் ஆர்வத்தை பின்தள்ளிவிடுகிறது. எல்லாமே வியாபாரமாகிவிட்ட நிலை!

“என்னுடைய பிள்ளைகள் சாப்பிட்ட கோப்பைகளை குழாயடியில் போட்டுவிட்டுப் போகிறார்கள். கழுவுவது இல்லை” என்பது ஒரு பெற்றோர் கவலையுடன் கூறிய கருத்து. “அவர்கள் ஓரளவு பரவாயில்லை. என் பிள்ளைகள் சாப்பிட்ட இடத்திலேயே விட்டுவிடுகிறார்களே” என்பது இன்னொரு தாயின் அங்கலாய்ப்பு. நள்ளிரவு வரை நண்பர்களுடன் சுற்றும் பிள்ளைகள், போதை வஸ்து பாவனை என்று பிள்ளைகள் வளர வளர பெற்றோரின் கவலைகளும் வளர்கின்றன. கண்டிக்கவும் முடியாத கையறு நிலையில் பெற்றோர்கள். ஐ போனும் இதற்கு அனுசரணை. ஊரில் கூட்டு குடும்பமாக ஒரே கூரையின் கீழ் பேரர், பெற்றோர் பிள்ளைகள் என்று வாழ்ந்த முறைமை; கட்டுப்பாடுகளை பேண வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. எல்லை வேலிக்கு அப்பால் மாமன் மாமி, சித்தப்பா சித்தி, ஊர் சமூகம் என்று பரம்பரை பரம்பரையாக பழகிய உறவுகள். புலம் பெயர்ந்து சிதைவுற்று, கேட்பாரற்ற சூழல். இளம் குடும்ப கணவன், மனைவியிடம் எத்தனை அவலம்? ஆடம்பர செலவுகள், நித்திய குடி, ஏறும் கடன் அட்டைகள், இறுக்கும் பற்றாக்குறைகள் என திட்டமிடப்படாத வாழ்க்கை முறையால் திசைமாறும் குடும்பங்கள்; விவாகரத்துக்கள்; எம்மவர்களிடையே ஏராளம்!

தாயகத்தின் ஊர்களின் பெயரால் லண்டனில் நடந்த; பல கொலைகளையும் கண்ட இளைஞர்களிடையேயான குழு மோதல்கள் இன்றும் இங்குள்ள ஊர்களின் பெயரில் தமிழ் பல்கலைக்கழக மாணவர்களிடையே தொடருகின்றது. இரவு கேளிக்கைகளில் ஈடுபடும் தமிழ் இளைஞர்கள், வெறி ஏற எவர் பெரிது என்ற குழு மோதல்களில் ஈடுபடுகிறார்கள். “வந்து விட்டோம். இது இந்த நாட்டு வழக்கம். வயதாக திருந்துவான்” என்று பெற்றோர் தங்களை தாங்களே ஆறுதல்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை. பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் ஆயிரக்கணக்கான கல்விக்கடன், பெற்றோரோடு மற்ற செலவுகள் இன்றி வாழக் கிடைத்துள்ள வாய்ப்பு என்பன எம் இளைஞர்களை தான்தோன்றித்தனமாக நடக்க ஊக்குவிக்கின்றன. தீர்வுக்கான திசை தெரியாமல் பெற்றோர் தவிக்கும் பிரச்சனைகள்.

பெற்றோருக்கும் உயர்வகுப்பு பிள்ளைகளுக்கும் போதை வஸ்துவின் தீங்குகள், பிரித்தானியாவில் தடை செய்யப்பட்டுள்ள அதன் தண்டனை விபரங்களை விளக்கும் போலீசாரின் கருத்தரங்கு அண்மையில் தமிழ்ப்பள்ளியில் நடந்தது. அதிபயங்கர விளைவுகளைத் தரும் A வகுப்பு போதை வஸ்துக்கள், B வகுப்பு, C வகுப்பு என தரம்பிரித்து அதன் மாதிரிகளையும் காண்பித்தனர். அதன் பின்விளைவுகளையும் விளக்கினார்கள். பெற்றோர் என்றுமே கண்ணால் காணாத அவற்றைப்பற்றி பல்கலைக்கழக மாணவர்கள் அறிந்திருப்பது ஆச்சரியம் தந்தது. சக பல்கலைக்கழக மாணவர்களிடம் புழக்கத்தில் அடிக்கடி இருக்கும் என்பது அவர்களின் பதில்.

புலம் பெயர் வாழ்வில் இத்தகைய சீரழிவுகளை எதிர்கொண்டே ஆக வேண்டிய நிலை பெற்றோருக்கு. ஆயினும் தங்கள் கடமையாக பிள்ளைகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பதின்ம வயதுக்குள் ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் அவர்களுக்குள் அமைய ஏற்றன ஆற்றுவதே எமது கடமையாகிறது. முஸ்லிம் சமுதாயம், சீக்கியர்கள் இன்றும் இளம் சந்ததிகளிடையே புலம்பெயர் நாட்டிலும் தமது ஆடை, அணிகலன்களில்கூட அடையாளங்களை பேணி வருகின்றனர். திருமணம், ஈமகிரியை சடங்குகள் என்ற இரண்டில் மட்டுமே சைவ தமிழர்களிடம் இது எஞ்சி நிற்கின்றது. “தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்” என்பது எம் முதுமொழி. எமது சமய, மொழிவழி இன அடையாளங்களை ஏற்ற பாலர் வயதிலேயே பேணச் செய்வது அழிந்து கொண்டிருக்கும் சுய அடையாளங்களை மீட்க பயனாகும். ●



## ஒரு பெண்ணோடு!

ஒரு பெண்ணோடு
உறவாடுகிறேன்
கலைக் கண்ணோடு
கவிபாடுகிறேன்;

நிலமங்கை நீயன்றோ
சுபாஷினி
நினைவெல்லாம் நீயன்றோ
கவிதாயினி;

உன் தேடலழகு நாடலழகு
என்னோடு உறவாடும் போது
உன் ஊடலழகு-அழகு;

உன் புருவமழகு உருவமழகு
என்னோடு உறவாடும் போது
உன் பருவமழகு-அழகு;

உன் விழியழகு மொழியழகு
என்னோடு உறவாடும் போது
உன் எழிலழகு-அழகு;

உன் முன்னழகு பின்னழகு
என்னோடு உறவாடும் போது
உன் தன்னழகு-அழகு;

உன் குடியழகு படியழகு
என்னோடு உறவாடும் போது
உன் மடியழகு-அழகு;

உன் சிகையழகு நகையழகு
என்னோடு உறவாடும் போது
உன் வகையழகு-அழகு;

உன் பேச்சழகு மூச்சழகு
என்னோடு உறவாடும் போது
உன் வீச்சழகு-அழகு;

உன் இடையழகு நடையழகு
என்னோடு உறவாடும் போது
உன் கொடையழகு-அழகு;

உன் நாதமழகு போதமழகு
என்னோடு உறவாடும் போது
உன் பாதமழகு-அழகு;

உன் முகமழகு அகமழகு
என்னோடு உறவாடும் போது
உன் சுகமழகு-அழகு;


உன் எழுதுமழகு பொழுதுமழகு
என்னோடு உறவாடும் போது
உன் முழுதுமழகு-அழகு;

உன் தந்தையழகு சிந்தையழகு
என்னோடு உறவாடும் போது
உன் விந்தையழகு-அழகு;



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**




# கர்மா



"கர்மா" என்பது ஏதோ நமக்கு விளங்காத தேவலோக வார்த்தையல்ல. 'கருமமே கண்ணாயினார்' என்பதை விளங்கிக்கொண்டால், 'கருமம் = செயல்' என்பது விளங்கும். ஒவ்வொரு செயலும் ஓர் கருமம். ஒவ்வொரு நாளும் காலை தொடக்கம் இரவு வரை நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும், அது சிறியதோ, பெரியதோ- கவனத்துடன் செய்கின்றோமோ அல்லது கவனமின்றி இயல்பாக (*Reflex Action*) செய்கின்றோமோ என்ற பாரபட்சமின்றி நம் அனைத்து செயல்களுக்கும் உறுதியாக ஓர் விளைவு ஏற்படும். விளைவுகள் நமக்கு மகிழ்ச்சியோ, துக்கமோ உண்டாக்கலாம். துக்க விளைவுகள் நம்மைப் பீடிக்கும் நோயாக மாறக்கூடும். நாம் செய்யாத எதுவுமே நம்மைப் பாதிக்காது. எல்லாம் 'நம் செயலே!'.

உடலை விட்டு உயிர் பிரிந்த பின்னும் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் வரை எந்தவித செயற்கை ரசாயன முறைகளையும் பயன்படுத்தாது, இயற்கையாகவே எந்தவித பழுதுமடையாத (*Decompose*) உடல் அமைப்பை தனது யோக வாழ்வின் மூலம் பெற்றவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். அவர் 1939ஆம் ஆண்டு, நவம்பர் 16ம் நாள் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சலில் நிகழ்த்திய பிரசங்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"ஒவ்வொரு நாளும் இரவு உணவு நேரத்தில் அனேகமாக நீங்கள் கூறுகிறீர்கள், 'தயவு செய்து இன்னும் சிறிது பரிமாறுங்கள்'. நீங்கள் உண்ட பிறகு கூறுகிறீர்கள், 'நான் அவ்வளவு அதிகம் சாப்பிட்டிருக்கக் கூடாது'. இது மனித இயல்பு. இறைவனது படைப்புகளிலேயே நாம் மிகவும் வேடிக்கையானவர்கள். நாம் நம்மை அறிவுத் திறனுள்ள மனிதர்கள் என்று கூறிக்கொள்கிறோம். ஆனால், நமது ஆசைகளுக்கு நாம் அடிமைகளாக இருக்கிறோம். ஒவ்வொரு நாளும் அந்த 'இன்னும் சிறிது' அதிகம் உட்கொண்டதால், 'திடீரென்று' உங்களுக்கு இதயநோயோ அல்லது வயிற்று வலிகளோ இருப்பதைக் காண்கிறீர்கள். அப்பொழுது வருத்தத்துடன் நீங்கள் கேட்கிறீர்கள், 'இது ஏன் எனக்கு நிகழ வேண்டும்? நான் நோயாளியாக வேண்டும் என்று எனக்கு விதிக்கப்பட்டிருக்க வேண்டும்.' ஆனால், அது அம்மாதிரியல்ல. அந்த 'இன்னும் சிறிது' அதிகமாக உண்டதை நீங்கள் மறந்து விட்டீர்கள். அப்பொழுது நீங்கள் சுயகட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சற்றுக் குறைவாகச் சாப்பிட்டிருக்க வேண்டும். ஒரு மோட்டார் யந்திரம் அதிக சுமையிலிருக்கும் பொழுது, நீங்கள் அந்தச் சுமையை அதிகரித்தால், இயல்பாகவே மோட்டாருக்கு அது கடினமாக இருக்கும். அது செயல் இழந்து விடலாம். அதைப் போன்றே, உங்கள் ஜீரண மோட்டார் யந்திரத்தை நீங்கள் அதிகம் வேலை வாங்கினீர்கள். அதுதான் காரணம். மேலும், அது உங்களால் உருவாக்கப்பட்டது. குடல் புண் அல்லது அஜீரணத்தால் எழும் உங்கள் வயிற்று வலிகள் வெறும் விளைவுகள் மட்டுமே!"- 80 வருடங்களுக்கு முன்னர் பரமஹம்ஸ யோகானந்தர் கூறிய கருத்துக்கள் இன்று மட்டுமல்ல, என்றென்றும் நம்முடைய ஆரோக்கிய வாழ்வுக்கு ஆதாரமாக உள்ளது.



சமீபமாக லண்டனில் சில நோயாளிகள் என்னிடம் தெரிவித்த சில விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அறுபது வயதைக் கடந்த நீண்டகால டயபட்டிக்ஸ் மற்றும் சிறுநீரகப் பாதிப்புடன் வாழும் ஒருவர் கூறியதாவது: "நான் தற்பொழுது சாப்பிடும் சோறு அளவை மிகவும் குறைத்துவிட்டேன். கறிகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்கிறேன். டயபட்டிக்கக்கு இன்சுலின்- ஊசி மருந்து மற்றும் மாத்திரைகள் உபயோகிக்கின்றேன். எனக்கு அடிக்கடி இனிப்பு சாப்பிடும் விருப்பம் வருகின்றது. அந்த நேரத்தில் ஒன்றிரண்டு சொக்கிளேட்டுக்கள் சாப்பிடுகின்றேன். என்ன செய்யலாம்? சரியா, பிழையா?" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டார்.

நான் கேட்டேன்: "என்ன காரணத்துக்காக சோறு அளவைக் குறைத்தீர்கள்?" அவர் பதில் அளித்தார்: "அதிகம் சோறு சாப்பிட்டால், இரத்தத்தில் 'குளுக்கோஸ்' அளவு கூடிவிடும் என்பதால், சோற்றின் அளவைக் குறைத்தேன்". "சோற்றின் அளவைக் குறைத்தால் 'சுகர்' குறையும்தானே!" என்று அவரிடம் கேட்டேன். 'ஆம்' என்று உணர்ந்து கொண்டார்.

"சுகர் குறைந்தால் அதற்கான மருந்துகளை குறைப்பீர்களா?" என்ற கேள்விக்கு, "குறைக்கவில்லை, அதே அளவுதான்" என்றார். "மருந்தைக் குறைக்காவிட்டால் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு மிகவும் குறைந்து *Hypo-Glycaemic* ஆகிவிடுவதால் இனிப்புச் சாப்பிட ஆர்வம் உண்டாகும். அதனால்தான் நீங்கள் 'சொக்கிளேட்' சாப்பிடுகிறீர்கள். உடல் தன் குறைபாட்டை தானே சமன் செய்து கொள்ளும் ஆரோக்கியத்துக்கான (*Body balance formula*) யுக்தி இது. சோறு நல்லதா? 'சொக்கிளேட்' நல்லதா? மருந்து நல்லதா? நீங்களே முடிவு எடுத்துக் கொள்ளுங்கள். உடலின் ஆரோக்கியமான செயல்பாட்டுக்கு எந்தப் பொருள் எந்த அளவில் தேவை என்பதை நீங்களே சிந்திக்கலாம், முடிவு செய்யலாம். சந்தேகம் ஏற்படின் எங்களிடம் 'ஆலோசனை' பெற்று, தெளிவும் பெறலாம்" என நான் கூற, முகமலர்ச்சியுடன் அந்த நோயாளி தெளிவுடன் நன்றி கூறினார்.



உடல் முழுவதும் 'கடி' வருத்தம் இருப்பதாகக் கூறி, 39 வயது நிரம்பிய பெண்மணி ஒருவர் சமீபமாக லண்டனில் சந்தித்தார். அவருடன் நடந்த உரையாடல்: முறையே ஏழு மற்றும் ஐந்து வயது நிரம்பிய இரண்டு குழந்தைகளுக்கு தாயான அவர் தன்னுடைய தோலில் சில மாற்றங்கள் ஏற்பட்டு முதுகு மற்றும் கை, கால்களில் மிகவும் நமைச்சல் (*Itching*) உண்டாகிறது. விறாண்டினால், சுகமாக இருக்கிறது. ஆனால், சில சூழ்நிலைகளில் சங்கடமாகவும், அருவருப்பாகவும் இருக்கிறது என்றார்.

"வேறு ஏதும் பிரச்சினை உள்ளதா?" என்று கேட்க, "சிறு வயது முதல் ஆஸ்துமா பிரச்சினை உள்ளது. *Inhaler* தேவைப்பட்டால், உபயோகிக்கின்றேன்" என்றார். "தற்போது ஆஸ்த்துமா தாக்கம் மிகவும் குறைவு" என்றும் கூறினார். "உடல் எடை எவ்வளவு?" என்று கேட்க 80 கிலோ என்றும், உயரம் 5 அடி 2 அங்குலம் என்றும் கூறினார். "வேறு ஏதும் சொல்ல வேண்டுமா?" என்று கேட்க, "தினசரி இரண்டு **பரசிற்றமால்** உட்கொள்கிறேன். சில நாட்களில் இரண்டு முறையும் தேவைப்படும். மாலை நேரங்களில் உடல் வலியும், சோர்வும் உண்டாகும்போது **பரசிற்றமால்** மாத்திரைகள் தேவைப்படுகின்றன. நீண்ட காலமாக உபயோகித்து வருகின்றேன்" என்று அதை ஒரு முக்கியமற்ற விஷயமாக கூறினார். கருமம்=செயல் கவனம் தேவை. பாதிப்பு உண்டாக்கும் எந்தப் பழக்கமுமே நீண்ட நாட்கள் தொடர்வதற்கு பெயர் 'Additction= அடிமை' என்பது நம் அனைவருக்கும் தெரியும். மருந்துகளும் கூடிப் போனால், வியாதிகளைப் பெருக்கிவிடும்.

அவரிடம் "ஆஸ்துமாவுக்கும், தோல் வியாதிக்கும் தொடர்பு உள்ளது தெரியுமா? உங்களது உயரத்துக்கு ஏற்ற சரியான உடல் எடை 55 கிலோ. ஆனால், சுமார் 25 கிலோ மேலதிகமான சுமையை நீங்கள் காவுகிறீர்கள். அதனால், மூச்சிறைப்பு உண்டாகும். பெரும்பாலான நேரங்களில் உடல் பருமனால் உண்டாகும் முட்டுக் குணத்தை ஆஸ்த்துமா என்று தவறாகக் கருதி *Inhaler* உபயோகிக்கின்றீர்கள். மேலும், நீண்ட காலமாகத் தொடர்ந்து '**பரசிற்றமால்**' உபயோகித்து வருவதால், உடலில் வரட்சித் தன்மை உண்டாகி சருமமும் வரண்டு, கடியும் சுருக்கமும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது என்று விளக்கிக் கூற, அவரும் உணர்ந்து உடன்பட்டார். உடன்பட்டால் தெளிவு கிடைக்கும்; தெளிவு வந்தால் தீர்வு சுலபம். **பரசிற்றமால்** நிறுத்தமும், உடல் எடை குறைப்பும் திட்டமிடப்பட்டது. கடி நீங்கவும், ஆஸ்த்துமா குறையவும் ஹோமியோபதி மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன. சில வாழ்வியல் மாற்றங்களை ஆரோக்கிய வாழ்விற்கான பழக்கவழக்கங்களை பரிந்துரை செய்தேன். 'கருமம்=செயல்' மாற்றங்கள் ஆரோக்கிய வாழ்வுக்கான திறவுகோல்.

நமது செயல்பாடுகளே நம் ஆரோக்கியத்துக்கான காரணிகள். தவறான செயல்களை நீக்கினால், நோய் நீங்கும். ஆரோக்கியம் வசப்படும். சரியான ஆலோசனை அவசியம். பக்கவிளைவுகளற்ற ஹோமியோபதி வைத்தியம், நல்ல பலனளிக்கும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**

**020 8144 1553**


# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

## MRT

## Menstrual Regulation Treatment



ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation




ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects



அதீத ரத்தப்போக்கு
Over Bleeding



கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




PCOD
சினைப்பை நீர் கட்டி

34% பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்

70% பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

## சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயபட்டிஸ் (Diabetes)




உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

# HOMOEO CARE


இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com



நூல் சுவடிகள் ஆலயத்திலிருந்து சபைக்கு எடுத்து வரப்படுகிறன.



நூலின் முதன் பிரிதியை வழக்கறிஞர் பாத்திமா ஜெயின் பெறுகிறார்.

# வித்தியாசமான ஒரு வெளியீட்டு விழா

தென் கிழக்கு இலண்டன் லூஷியம் நகரில் மிக வித்தியாசமான ஒரு நூல் வெளியீட்டை கடந்த வாரம் கண்டு மகிழ்ந்தேன். ஒலி / ஒளிபரப்பாளரும் வழக்கறிஞருமான விமல் சொக்கநாதன் எழுதிய “விமலின் பக்கங்கள்” நூலின் வெளியீட்டு விழா அக்டோபர் 26 சனிக்கிழமை லூஷியம் சிவன் கோவில் கலாமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நூல் கடந்த ஜூன் மாதம் சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள நாரத கான சபா மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இலண்டன் வெளியீட்டு விழா ஆரம்பமாகும் முன்னர் வந்த விருந்தினர்களுக்குச் சிற்றுண்டிகளும் தேநீரும் (இலண்டன் திருமணங்கள் போல) வழங்கப்பட்டது. இது குளிர்காலத்து இருட்டு நேரத்தில் மிகவும் இதமாக இருந்தது.

விமலின் பக்கம் சுவடிகள், பிரதான ஆலயத்தில் பூஜையில் வைக்கப்பட்டு, பின்னர் ஆலய பிரதம குரு மகேஸ்வர குருக்கள் ஏடுகளை சுமந்துவர, சுதுமலை சர்வேஸ்வர குருக்கள் மந்திரங்களை ஓதிவர விழா மண்டபத்துக்கு சம்பிரதாய பூர்வமாகக் கொண்டுவரப்பட்டன.

பண்டைய தமிழ் மன்னராட்சியின் போது அரங்கேற்றம் செய்யப்படும் ஒரு நூல் யானை மீது வைக்கப்பட்டு அரசவைக்கு எடுத்துவரப்படும். பின்னர் அரண்மனை ஆடல் நங்கையர் மன்னனைப் புகழ்ந்து ‘விருத்தம்‘ ஒன்றை வழங்குவார்களாம்.

விமலின் நூல் அரங்கேற்றத்திலும் இளம் நாட்டிய நங்கையர் விருத்தம் ஒன்றை வழங்கி அரங்கேற்ற நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்கள்.

விருத்தம் விழா நாயகனைப் பற்றியதாக இருந்தது. கவிதையை இலண்டன் கவிஞர் பாலரவி எழுதியிருந்தார். இசை அமைத்தவர் சாந்தினி தர்மநாதன். நடன அமைப்பு பரத கலைமாமணி ரோகிணி சாந்தரூபன்.

அவரது நயனாம்ருத நர்த்தனாலயா மாணவியர் ஐவர் நடன நிகழ்ச்சிகளுடன் நூல் வெளியீட்டு விழாவை வண்ணமயமாக ஆரம்பித்து வைத்தனர்.

வானொலி அறிவிப்பாளர் பீட்டர் யேசுதாசனின் வரவேற்போடு பிரமுகர்கள் மேடையேறி தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிபிசி ஆனந்தி சூரியபிரகாசம் அவர்களோடு தொலைக்காட்சி அறிவிப்பாளர் சுமதி சுரேஷன், மருத்துவ கலாநிதி இராசையா, கவிஞர் இராஜமனோகரன், தமிழ்மொழிப் பற்றாளர் சிவ பரிமேலழகர், ‘புதினம்‘ ஆசிரியர் இராஜகோபால் ஆகியோர் மேடையில் அமர்ந்து ஒவ்வொருவராக தமது நூல் மதிப்பீடுகளை வழங்கினர்.

நூலாசிரியர் விமல் சொக்கநாதன் தமது ஏற்புரையின் போது நாட்டிய ஆசிரியை குரு ரோஹிணி சாந்தரூபன், அறிவிப்பாளர் பீட்டர் யேசுதாசன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இராப்போசனத்துடன், வித்தியாசமான விமலின் நூல் வெளியீட்டு விழா இனிதே நிறைவடைந்தது.




நூலாசிரியர், நடன ஆசிரியையுடன் நடன மணிகள்



ஆனந்தி சூரியபிரகாசம்



சிவ பரிமேலழகர்



சுமதி சுரேஷன்



இராசையா



இராஜமனோகரன்



நூலாசிரியர் விமல் ஏற்புரை நிகழ்த்துகிறார்



மகேஸ்வரக் குருக்கள், சர்வேஸ்வரக் குருக்கள் நூலாசிரியருக்கு ஆசி.



அறிவிப்பாளர் பீட்டர் யேசுதாசனுக்கு ஏற்பாட்டுக்குழு சுரேஷ் பொன்னாடை



நடன ஆசிரியைக்கு ஏற்பாட்டுக் குழு செயலர் சுமதி ரகுநாதன் பொன்னாடை



ஏற்பட்டு குழு வித்யா மங்கள விளக்கேற்றல்



‘நயினாம்ருத நர்த்தனாலயா’ றோஷினி சாந்தரூபனின் மாணவியரின் நடனவிருந்து,


பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES UK
2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX | Contact: Tel: 0208 527 3819 | Mob: 07956 919 511
சைவத் திருக்கோயில்கள் பெருமையுடன் வழங்கும்
ஓர் உன்னதமான மாபெரும் கர்நாடக தெய்வீக இசை நிகழ்ச்சி
Theiveega Gana Utsavam
தெய்வீக கான உற்சவம்
தெய்வீக கான இசை விழா
Super Singer:
Tamil Winner: Varsha
இந்நிகழ்வுகள் ஓர் இசை விழாவாகவே இடம்பெறும்.
இந்நிகழ்வில் இங்கிலாந்தில் வாழும் இளம் கலைஞர்களும்,
தமிழகத்திலிருந்து வாய்ப்பாட்டு கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
DECEMBER
08
SUNDAY
09.00 am - 9.00 pm
FREE ENTRY
உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்,
Highgate Murugan Temple,
200A Archway Road, London N6 5BA
கர்நாடக சங்கீதமும், பக்திப் பாடல்களும் சங்கமமாகும் ஓர் அற்புதமான இசை நிகழ்ச்சியைத் காணத்தவறாதீர்கள்!
தொடர்புகளுக்கு: 0750 034 8132, 0795 685 4075, 0795 691 9511, 0741 135 4315


ENGINE TEC MOTORS
we offer Facilities for
• Servicing
• Clutches
• Brakes
• Overhauls
• Car Electricals
• Pre - MOT Checks
• ALL Types of Repair & Body Work
• Insurance Work Undertaken
என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்
Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945
Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com
Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE
தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.





டாக்டர். என்.ஜெகநாதன்

# குழந்தையும் தெய்வமும்

பிஞ்சு மனமுள்ள குழந்தை எவரையும் மிஞ்சிவிட முயல்வதில்லை மனதிலிருந்து 'நஞ்சைக் கக்குவதாயும் இல்லை. அன்புக்கும் அணைப்புக்கும் ஏங்குவதான குழந்தை உள்ளத்தை தெய்வத்தன்மையானது என்பார்கள். குழந்தைப் பருவம் தாண்டியதும் அத்தன்மை இழக்கப்பட உள்ளதா?

இல்லை அறிவு என்பதிற்கான தகவல்களை குழந்தையின் மூளையில் கொண்டிருக்க சாத்தியமில்லை. வளரும் பிரயாத்திபோதே அது பதிவாகிறது. அதனால்தானோ என்னவோ அது மற்றவரை மிஞ்சிட முயல்கிறது. அதில் ஏமாறும் போது 'நஞ்சைக் கக்குவதாக ஆவதற்கு வேறு இயல்புகளும் காரணமாகின்றன.

இளம் கன்று பயமறியாது என்பது ஏன்? ஆபத்தைப்பற்றிய அறிவு இல்லாவிடில் பயம் இல்லை. அதுவே அஞ்சுதலுக்கும், ஆறுதல் பாதுகாப்பு தேடவும் காரணமாகிறது. ஆழம் தெரியாமல் காலை விடாதே என்பார்கள். ஆணவம் மேலோங்குவதால் அறிவு மறைக்கப்படலாம். அறியாமை அல்லது மாயைக்கானது.

வளர்ந்து விட்டபின் தெய்வத்தமை பெறமுடியாதா? அதற்கெனவே சமய, ஆன்மீக முறைகள் எனப் பலவுள்ளன. அவற்றை தோற்றியவர்கள் மேலானவர்களே அவற்றை தற்போது மக்களிடையே பரப்புவர்களில் சிலர்தான் எதிர்மாறானவர்களோ என எண்ணத் தோன்றுகிறது. ஊறுபடத்தக்க (*Vulnerable*) நிலையில் உள்ளவர்களே அதற்குப் பலியாகிறார்கள்.

மனிதனும் தெய்வமாகலாம், வாரி வழங்குவதால் வள்ளல் எனவும், தனக்கென்று பெறவிருப்பதை இன்னொருவருக்கு அளித்த தியாகி எனவும் 'நடமாடும்' தெய்வமாக போற்றப்படலாம். மற்றவர்களை ஈர்ப்பதாயும் அச்செய்கைகள் அமைகின்றனவே.

தெய்வம் நம்மை ஈர்ப்பதாக உள்ளதா? அதிர்ஷ்டம் கிடைத்தது அல்லது இன்னொருவர் எதிர்பாராதவாறு உதவி அளித்து தெய்வச்செயல் என நாம் நன்றி செலுத்துகிறோம். நோய், நொடியின்றி எம்மைக் காக்க வேண்டுவதாய் தெய்வத்தை நாடுவதும் நாம்தான்.

எவ்விதமானலும் பயம் அல்லது புலன் என்பதன் அடிப்படையில் எமது தெய்வநம்பிக்கை பெரும்பாலும் அமைகிறது. பொருளை நாடி பலரும் அருளை நாடி சிலரும் அலைகிறார்கள். அருள் பிரசாகிப்பது எமக்குள்ளாக ஆகவேண்டியது. இன்னொருவரிடமிருந்து கையளிக்கப்படக்கூடியதாக அது அமைவதில்லை. தெய்வத்திடமிருந்து அதை எதிர்பார்பது மாயையென்பதாக அமையும். குழந்தை மனம் விருத்தியடைவுள்ளதாக இருப்பினும் இயற்கை இயல்பான தூண்டுதல்கள் (*DRIVES*) ஆசை கொள்ள, சினமடைய காரணமாகின்றன என உளவியல் கூறுகிறது. ஆணவம் என்பதுடன் அதற்கு எதிர்மாறான (மேலான) *Super Ego* என்பதும் வளர்ச்சியின்போது மனம் அடையவுள்ளது எனவும் உளவியல் ஏற்கிறது. இரண்டாவதானது மனச்சாட்சியை ஒத்ததாக கருப்படுவதாகும். தான் வளர்ப்பது ஏழைக் குடிசையிலா அல்லது ராஜ மாளிகையிலா என்பதை குழந்தை அறியாது. அவைபற்றிய அறிவு பெற்ற பின்னரே குழந்தையால் எது சாத்தியமாகும்.

செல்லமாக வளர்க்கப்படும் பிள்ளைகளது பிடிவாதம் அதிகமாவது ஆணவத்தின் ஆதிக்கம் எனவும், கட்டுப்பாட்டுடன் வளரும் பிள்ளைகள் மற்றவரை மதித்து, பொறுமைகாட்டுவது *Super Ego* என்பதன் ஆதிக்கம் எனவும் கருதலாம்.

கட்டுப்பாடின்றி வளர்ந்து விட்டவர்களின் பிற்காலம் தர்மசங்கடம் ஆகலாம். அவர்கள் தர்மம் பேணுவது சங்கடம்தான். தர்மம் என்பது நேர்மை, மெய்மை, தூய்மை என சுயபய வேண்டும். தானம் சமூக சேவை புரிவதாக மட்டும் அமைவதில்லை. குழந்தையினது சிரிப்பு வஞ்சகமற்றது என்பார்கள். வளர்ந்தவர்களின் சிரிப்பு எத்தனையோ விதமாகலாம். ஆணவச் சிரிப்பு, சாகசச்சிரிப்பு, அசட்டுச்சிரிப்பு என்றெல்லாம் உள்ளன.

குற்றங்களை மறந்துவிடும் மனதால் குழந்தையை தெய்வத்துடன் ஒப்பிடுவார்கள். ஆழமாக நினைக்கத் தெரியாத இளம் மனம் மறந்துவிடுவது கடினமல்ல. அவ்வாறு நினைக்கத் தெரிந்தவுடன் மறப்பது அவ்வளவு சுலபமா என்ன? சுடு சொல்லால் ஏற்படும் வடு ஆறுவது கடினமே.

இளவயதினில் ஏற்படும் பிணக்குள் வாழ்நாள் வரை நீடிப்பதாக சிலரது மனம் அமைகிறது. சுவாவமாக ஜன்மத்தில் அமைவது (கன்மம் என்பதோ?) அதற்கு ஊன்றுகோளாகிவிட்டால் அதோகதிதான். தலைமுறைக்கும் வன்மமாக ஆகிவிடும்.

சுபாவம் மாறப்போவதில்லை. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை எனவுமாகலாம். பழக்கத்தை மாற்றுவது படிப்படியாகவே சாத்தியப்படும். பொறுமை எனின் என்ன வென்று தெரியாவிடின் படிப்படியாக அடைவது எப்படி?

தெய்வத்தன்மை என்பது மனம் அடையக்கூடிய பெருந்தன்மை. இதை *Presence of Mind* என ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதற்குரிய பண்புகள் அமைவதை அருள் (*Grace*) அடைவதாகக் கருதலாம். பொறுமை, கருணை, நேர்மை என்றவாறு இது அமைவதற்கு மனம் பண்படுத்தப்படவேண்டும். இல்லையேல் மற்றவர்களது மனதைப் புண்படுத்துவதாக வளர்ந்து விடுவோம். அல்லது சிடு மூஞ்சியாக அமையவும் நேரிடலாம்.

பெறுவதற்கு பெற்றோர் என்ன தவம் செய்தனரோ என மற்றோர் வியக்குமாறு வாழ்பவன் தெய்வப்பிறவியென்றே கருதலாம். மற்றவரை வதம் செய்து வாழ்பவனாக உருவெடுத்தவனாக கருதலாம். குழந்தைப் பருவத்தின்போது இந்த ஒரு சாராருக்குமிடையில் பெரும் வேறுபாடு இருந்திருக்க முடியுமா?

விளையும் பயிர் முளையிலேயே தெரியக்கூடியது, மனிதப் பிறவியிலும் அவ்வாறுதான் அமையுமென்பதில்லை. எதையும் அறியமுடியாத பருவத்திலிருந்து அறிந்து கொள்ளக்கூடிய பருவமடையும் போதே மேற்கூறிய வேறுபாடுகளை உடையவராகிறார்கள்.

கண்டு/கேட்டு விட்டவற்றின் மெய்மையென்ன வென அறியக்கூடியதான மனம் கொண்டால்தான் தர்மம் (அறம்) காத்தலுக்கு உரியதாகலாம். கடவுள் பக்தன், சமூக சேவகன் என்ற முறையில் மட்டும் அது சாத்தியமாகாது.

ஆன்மாவுடன் சம்பந்தப்பட்டதாக ஆன்மீகம் அமைகிறது என பொதுப்படையாக ஏற்கிறார்கள். மெய்மையறியும் முயற்சி (தேடல்) பற்றியதே ஆன்மீக மார்க்கம் என்று மட்டுமல்ல, அதுவே இறைவனுக்குரிய வழிபாடுகளில் உயர்ந்ததாகிறது என்றும் கீதை சொல்வதாகிறது.

வாழ்வில் எதிர்நோக்கப்படுவன பற்றி நேர்மை கடைப்பிடிப்பதாக அது அமையும் அறங்காவலர் (*TRUS-TEE*) என்ற ஸ்நானம் இதன் அடிப்படையாக அமைவதே.

பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பார்கள். பெற்றமனம் பித்தாவது 'பந்தம்' ஆகிவிட்டதால் பந்தம் என்பது நிபந்தனைகளை உள்ளடக்குவது. நிபந்தனைகளை தளர்த்தினால் பந்தமும் அவ்வாறுரும்தான்.

ஆங்கிலத்தில் *ENGAGE,NOT ENTANGLE* என்பதை, தலையிடு ஆனால் கட்டுப்படாதே எனலாம். அல்லது கட்டுபடுத்தலில் கட்டுப்பாடு என்றும் அமையலாம். பத்து மாதம் வயிற்றில் சுமந்ததால் பிள்ளைகளை ஆயுள் பூராவும் "சிறைப்படுத்துவாக" கட்டுப்படுத்தும் தாய் கொடியவளே என பிரபல பேச்சாளர் ஒருவர் கூறியுமுள்ளார்.

பஞ்சு போலிருந்த பிஞ்சுமனம் நாளடைவில் கல்லாவது எப்படி? மனம் கெட்டியாகிவிடும் போது சீமந்து போல் இறுகிவிடுகிறது. வளைந்து/பசிந்து விட முடியாது அறிவுணர்வு விரிவாக்கப்பட முடியாமல், அடைக்கப்படுவதான் (*CLOSED*) விளைவு இது.

பிள்ளைகள் தம்மறியாப் பருவத்தில் தரும் தொல்லைகளை நாம் பொருட்படுத்துவில்லை. அறிந்து கொள்ளக்கூடிய பருவத்தில் தருவது கவனிக்கப்பட வேண்டியது. பொறுத்துக்கொள்வதும் அவசியமே. உள்ளத்தை (உணர்ச்சிவசப்படுவதை) கடந்து விடக்கூடிய தன்மையே அதற்குரிய அருள் பெற்ற நிலை உள்ளத்தை கடக்க முயலாமல் கடவுளைத் தேடுவதான வழிகளில் பலரும் ஈடுபடுகிறார்கள். அந்த வழிகளில் பலன் பெறுவது யார் என நான் சொல்லவும் வேண்டுமோ? குழந்தையாக மட்டுமல்ல, உள்ளத்தை கடக்க வல்லவன் எப்பருவத்திலும் தெய்வத்தன்மை கொண்டவனாகிறான்.

குழந்தை மனம் தெய்வம், இவை தொடர்வுடையவையோ!



# 'இது' பெருமை



அகில இந்திய சங்கீத சம்மேளனத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் கர்நாடன சங்கீத விழாவின் ஐந்தாவது நாளான அன்று என்றுமில்லாதவாறு சபை நிறைந்து வழிகிறது. காரணம் ஜேம்ஸ் மார்ட்டின் என்னும் ஆங்கிலேயர் ஒருவர் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

இடைவேளையின் போது இது பற்றிப் பேசாதவர்களேயில்லை.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த அமலன் கூட தேநீர் அருந்தும்போது தன் நண்பன் பார்த்திபனிடம் இதுபற்றி பெருமையாக பேசிக்கொண்டான். ஆனால் பார்த்திபனோ கோபம் கலந்த நளினத்துடன் அருகிலிருந்த கூட்டத்திற்கு கேட்கவேண்டும் என்பதற்காகவே உரத்த குரலில் கேட்டான்:

ஒரு வெள்ளைக்காரன் இந்திய வாத்தியமான மிருதங்கத்தை வாசிக்கிறான் என்று தானே நீங்கள் எல்லோரும் இவ்வளவு புளகாங்கிதம் அடைகறீர்கள். அறிவு கெட்ட மடையா! நம்முடைய இந்தியர்களில் எத்தனை பேர் அவனைப் போல உடுக்கிறார்கள். எத்தனை பேர் அவனுடைய மொரியை வலிந்து கற்கிறார்கள். எத்தனை பேர் அவனுடைய சமயத்தை கடைபிடிக்கிறார்கள். இப்படி எல்லாமே அவனைப் போலவே செய்கிறார்கள்.

ஆனால் எந்த ஒரு வெள்ளையனும் இதை அதிசயமாக நினைப்பதில்லை— பெருமைப்படுவதில்லை பிதற்றி பிதற்றி புளகாங்கிதமடைவதில்லை. ஆனால் அற்ப புத்தி படைத்த நம்மவர்கள் மட்டும் அப்படியில்லை. இவர்களுக்கு ஒரு வெள்ளைக்காரி சேலை கட்டி விட்டால் போதும். யாரோ ஒரு கோளாறு பிடித்தவள் எதற்காகவோ கட்டியிருக்கிறாள் என்று நினைக்காமல் சேலையின் பெருமையை உலகம் பூராவும் உணர்ந்து விட்டதாக மட்டாள்தனமாக பிதற்றித் திரிகிறார்கள்.

ஒரு வெள்ளைக்காரனை ஒரு கோவிலில் பார்த்து விட்டால் போதும். அந்த பயித்தியக்காரனுக்கு என்ன விளங்குகிறது-எது விளங்குகிறது இங்கு என்ன செய்கிறான் என்று எதையுமே சிந்திக்காமல் இந்து சமயத்தின் கீர்த்தி உலகளாவியது என்று பைத்தியர்களைப்போல அலட்டிக்கொள்கிறார்கள். தங்கள் மொழியில் சமயத்தில் கலையில் உணவில் உடையில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மாற்றான் தயவில்தான் அந்த நம்பிக்கை வளரவேண்டுமா?

இடைவேளையின் பின் பலரின் நாற்காலிகள் காலியாக இருந்தன.

# எதற்காக வாழ்கிறோம்?



மனித உடலிலுள்ள ஜீன்களின் கட்டமைப்பையும் அவைகளின் தொழிற்பாட்டையும் அமெரிக்க விஞ்ஞானிகள் முற்று முழுதாக கண்டு பிடித்து விட்டார்கள் எனவும்- இந்தக் கண்டுபிடிப்பு என்றோ ஒரு நாள் பல்லாண்டு பல்லாண்டு காலம் மனிதர்கள் மரணமின்றி தொடர்ந்து வாழ்வதற்கு வழி வகுக்கப்போகிறது என்றும், கோவில் வேதம் வேதாந்தம் எல்லாம் குப்பைத் தொட்டிக்குப் போகப் போகின்றன என்றும் வெகு உற்சாகமாக கூறிக்கொண்டே அந்தச் செய்தி வந்திருந்த விஞ்ஞானப் பத்திரிகையை காந்தனிடம் கொடுக்கிறான் அவனின் நண்பன்.

அலட்சியமாக பத்திரிகையை வாங்கி அதைப் படிக்காமலேயே ஒரு பக்கமாகப் போட்ட காந்தனின் செய்கையை கண்டு ஆச்சரியப்பட்ட நண்பன் கேட்டான்:

இந்தச் செய்தியை நீ நம்பவில்லையா?

அறிவு கெட்ட ஜன்மமே! தயவு செய்து ஒன்னை புரிந்து கொள். மனிதன் என்பவன் இருதயம், இரப்பை, சிறுநீரகம், சுவாசப்பை போன்ற உறுப்புகளின் மூட்டையுமல்ல மனித வாழ்க்கை என்பது இந்த உறுப்புக்களின் நிரந்தர தொழிற்பாடுமல்ல.

எங்கோ எதற்காகவோ எதையோ அடைவதற்காக பரிணாமித்துக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கை உடல், மனம், உயிர் என்பற்றின் சிக்கலான ஒருங்கிணைந்த தொழிற்பாடு. இந்தச் சிக்கலான சூத்திரத்தை புரியாமல் உடலை மட்டும் காலத்தை வென்று வாழ வைப்பதால் மனிதர்கள் இங்கு ஒன்றும் வாழ்ந்து கிழித்து விட மாட்டார்கள். எதற்கா வாழ்கிறோம் என்ன வேண்டு வாழ்கிறோம் என்று தெரியாதபோது நூறு வருடம் வாழ்ந்தென்ன? ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தென்ன? மனித மனத்தையும் அவன் சிந்திக்கும் முறையையும் மாற்றாமல் அவனுடைய உடலின் ஆயுட்காலத்தை மட்டுமே நீடிப்பது தான் ஒரு மனிதனுக்கு இந்த பிறவியில் கொடுக்கக்கூடிய அதிகூடிய தண்டனை. அந்தத் தண்டனையை அனுபவிக்கும் போது தான் முன்னோருபோதும் இல்லாதவாறு அவனுக்கு கோவில் வேதம் வேதாந்தம் எல்லாமே தேவைப்படும்.

இவற்றை எல்லாம் கவனமாகக் கேட்ட நண்பன் காந்தனிடம் கேட்டான்: 'உடலின் ஆயுட்காலத்தை நீடிக்கும்போதே மன வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினால்...'

நண்பனின் இந்தக் கேள்வியை ரசித்து உரக்க சிரித்த காந்தன் கூறினான். மனது வளர்ச்சி அடைந்த சிந்தனை முறை மாறிய இந்த உலகத்தின் உண்மை நிலையை விளங்கிய ஒருவனும் இங்கு நிரந்தரமாக வாழ விரும்மாட்டான். உண்மையை உணருவதே பரிணாமத்தின் குறிக்கோளாக இருக்கும் போது அதை உணர்ந்த பின் மனிதனுக்கு இங்கே என்ன வேலை?

அவன் மனிதனல்ல புத்தன் !

# பம்மாத்துக்கள்

கடந்த பத்து வருடங்களாக இலண்டனில் வசிக்கும் தமிழ்க் கலைகளின் பாதுகாவலர் தமிழ்க் கலாச்சாரத்தின் தந்தை அறுபத்தி ஐந்து வயது நிரம்பிய உயர்திரு மகாலிங்கம் அவர்கள் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமது கலைகளையும் கலாச்சாரத்தையும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இலண்டன் கலைகோவில் என்னும் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் தலைவராக வேறு இயங்கி வருகிறார். இது விடயமாக அவர் அரசாங்கங்களுடன் பேசுகிறார். அடிக்கடி வெளிநாடுகளுக்கு வேறு செல்கிறார். இலண்டனில் வாழும் தமிழ் பெற்றோர்கள் அவரை தமிழ் அன்னை பெற்றெடுத்த தவப் புதல்வனாக மதிக்கிறார்கள். கடந்த பத்து வருடங்களில் கலாச்சாரத் தந்தை இலண்டனில் தலைமை தாங்காத கலை நிகழ்ச்சி கிடையாது. பிரதம விருந்தினராக கலந்து கொள்ளாத கலாச்சாரச் தந்தை இலண்டனில் தலைமை தாங்காத கலாச்சார நிகழ்ச்சி கிடையாது.

இன்று மாலை கூட அவர் ஒரு புல்லாங்குழல் அரங்கேற்றத்திற்கு தலைமை தாங்குவதற்காக சென்றிருக்கிறார். வீட்டில் அவருடைய செல்லப்பிராணிகளான காம்போதி என்னும் நாயும் கல்யாணி என்னும் பூனையும் வழமை போல தம் எஜமானைப் பற்றி தமக்குள் பேசிக்கொள்கின்றன. ஸோபாவில் படுத்திருந்தபடியே கல்யாணி காம்போதியிடம் கேட்டது:

நமது எஜமான் ஒரு குறளி வித்தைக்காரன் என்று நீ அவரை மதிப்பதே இல்லை. அவருக்கு சங்கீத அறிவே கிடையாது என்று வேறு அடிக்கடி கூறுகிறாய். அப்படியானால் சபையோர்களின் கரகோஷம் வானைப் பிளக்க அவர் எப்படி மேடைகளில் சங்கீதத்தைப்பற்றி அவ்வளவு விஸ்தாரமாக பேசுகிறார் ?

உரத்த குரலில் சிரித்துவிட்டு காம்போதி கூறியது.

இதை விட சுலபமான விடயம் வேறு எதுவுமே கிடையாது. நம் எஜமானுக்கு தெரிந்தது எல்லாமே நான்கு ராகங்களின் பெயர்கள் மூன்று வாத்தியங்களின் பெயர்கள் இரண்டு கடவுள்களின் பெயர்கள்.



இவற்றை மட்டுமே வைத்து இன்று அரங்கேற்றத்தில் அவர் எப்படி பேசுவார் தெரியுமா?

பிருந்தாவன கோபியர்களை மயக்கி அங்கு மேயும் பசுக்களை தானாகவே பால் சுரக்க வைத்த அந்த மாயக்கண்ணனின் வாத்தியம் இந்த புல்லாங்குழல். இராவணன் அந்த கலைநாதனின் கோபத்திற்கு ஆளான போது அந்த கலைநாதனையே மயக்க இராவணன் பாடிய ராகம் இந்த காம்போதி. இந்த சிறுவனின் வாசிப்பு அந்த மாயக் கண்ணனையே மிஞ்சி விட்டது. இவனின் காம்போதி கேட்டு அந்த இராவணனே மயங்கி விடுவான்.

சபையில் இருக்கும் புத்தி கெட்ட வெளவால் கூட்டத்திற்கு கலைநாதன், காம்போதி, கோபியர்கள், மாயகண்ணன் இவையெல்லாம் ஒரு கலாச்சாரத் தந்தையால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய ரொம்ப டெக்னிகலான விடயங்கள் என்ற நினைப்பு! நம் எஜமானின் இலக்கிய சங்கீத அறிவை கண்டு மெய் சிலிர்த்து கரகோஷம் செய்வார்கள்!

இங்கு எத்தனை பம்மாத்துகள்!

# போகிற போக்கில்...



ஏ.ஜே.ஞானேந்திரன்

## துணிச்சலான ஒரு நடிகை.....

பல ஹாலிவுட் திரைப்படங்களில், திகிலூட்டும் சண்டைக் காட்சிகளில் துணிச்சலாக நடிப்பதில் புகழ்பெற்ற Mayling Ng என்ற பிரித்தானிய ஸ்டன்ட் நடிகை, இன்னொரு ஆர்னோல்ட் ஸ்வாட்ஸ்நெக்கராக வேண்டும் என்பதே என் கனவு என்கிறார்.



## கொட்டும் பணம்.....

ஒரு வருடத்தில் இரு தடவைகள் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில், ஜாக்பாட்டை வென்றிருக்கிறார் அமெரிக்கரானRolf Rhodes. உடனடியாக பணம் வெற்றிபெறும், இரண்டாவது சீட்டு இவருக்கு $4,000,000 தொகையை வாரிவழங்கியுள்ளது.



## முதன் முதலாக....

அடக்குமுறைக்கு பெயர் போன நாடு என்ற பிம்பத்தை உடைக்க, பல்வேறு சீர்திருத்தங்களை சவுதி அரேபியா மேற்கொண்டு வருகிறது. நீண்ட காலமாக பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி இல்லாமல் இருக்க, 2018ஆம் ஆண்டு முதன்முதலாக பெண்கள் காரோட்ட அனுமதிக்கப்பட்டார்கள். அதே போல ஆண்களின் அனுமதியின்றி பெண்கள் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) பெறவும், ஆண் துணை இல்லாமல் தனியாகப் பயணம் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. ஆண் பாடகரை கட்டிப்பிடித்த பெண் கைது செய்தப்பட்டதைப்போல், அங்கு பெண்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் சந்தித்து வருகின்றனர். பெண்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் பெண் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிலர் அங்கு சித்திரவதை செய்யப்படுவதாகவும் குற்றச்சாட்டு இருக்கிறது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமையன்று பெண்கள் குத்துச்சண்டை போட்டி, தலைநகரான ரியாத்தில் மன்னர் பெயரிலுள்ள சர்வதேச அரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கு 68,000 பேர் அமரும் வசதி கொண்டது. முதன் முதலாக என்ற வரிசையில் பெண்களுக்கான முதல் மல்யுத்தப் போட்டியும் இங்கு நடந்தேறி இருக்கின்றது..







## இப்படியும் நடக்கிறது.....

35 வயதான சுவீடன் நாட்டு தாய் ஒருவர், தன் 14, 8 வயது சிறுமிகளை வைத்து மோசமான வீடியோ படங்களை எடுத்து, இணையத்திலும் விற்றிருக்கிறார். உலகம் போற போக்கைப் பாரு டிங்கிரி டிங்காலே....




கனடாவின் நயகாரா நீர்வீழ்ச்சியின் விளிம்பில் 100 வருடங்களுக்கு முன்னர் அசையாது மாட்டிக் கொண்ட ஒரு இரும்புப் படகு, பலத்த காற்று, கடும் மழை காரணமாக 50 மீற்றர் தூரம் வரை நகர்ந்திருப்பது, பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சட்டம் இயற்றியவருக்கே பிரம்படி...



இஸ்லாமிய நாடான இந்தோனேசியாவின் பிரம்படித் தண்டனைகள் உலகப் பிரபல்யம் பெற்றவை. Aceh என்று அழைக்கப்படும் முஸ்லீம்களைக் கொண்ட இந்தோனேசிய மாவட்டம் ஒன்றுதான் உலகில் ஷரியா என்ற கடும்போக்கான இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தி இருக்கின்றது. மத்திய அரசுடனான ஒப்பந்தம் ஒன்றின்படி, இந்தச் சட்டம் இந்தோனேசியாவின் சுமத்திரா தீவிலுள்ள இந்த மாவட்டத்தில், 2001இல் அறிமுகப்படுத்தப்பட்டது. சூதாட்டம், மதுபானம் அருந்துதல், ஒரு பாலினச் சேர்க்கை, திருமணத்திற்கு முன்பான உடல் உறவு, திருமணமானவர்கள் வெளியாருடன் பாலுறவு வைத்தல் போன்ற குற்றங்களுக்காக பிரம்படி தண்டனையாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மாவட்டத்தில் வசிக்கும் 5 மில்லியன் ஜனத்தொகையில், 98 வீதமானவர்கள் இஸ்லாமியர்களே! சமீபத்தில் சட்டம் இயற்றியவரே, இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தது நிரூபிக்கப்பட்டதால், 28 தடவைகள் பிரம்படி பெற்றுள்ளார். இந்தக் கவுன்சில் அங்கத்தவருக்கு மாத்திரமல்ல, இவருடன் உறவு வைத்துக் கொண்ட திருமணமான பெண்ணுக்கும் 23 தடவைகள் பிரம்படி கொடுத்துள்ளார்கள்.பொதுமக்கள் இதை நேரில் பார்ப்பது மட்டுமல்லாமல், தங்கள் அலைபேசிகளிலும் இதைப் பதிந்து வைப்பதுண்டு.

## மரம் ஏறுகிறாரா? மலை ஏறுகிறாரா?



உலகின் 14 அதி உயரமான மலை உச்சிகளை ஏறி முடிப்பது என்பது ஒரு சாதாரண சாதனையல்ல. அதிலும் இந்தப் பதினான்கையும் அதிவேகமாக ஏறிமுடித்து, சாதனையாளர் ஆவது என்பது மலைப்பூட்டும் விடயம். நேபாளத்தைச் சேர்ந்த நிர்மால் புர்ஜா என்பவர்8000 மீற்றர்களுக்கு(26,250 அடி) குறையாத உயரம் கொண்ட இந்தப் 14 மலையுச்சிகளையும் 7 மாதங்களில் ஏறி முடித்து அசத்தியுள்ளார். சுமாராக எட்டு வருட காலத்தில்14 அதி உயரமான மலை உச்சிகளும் ஏறப்பட்டது என்பதே பழைய சாதனையாக இதுவரையில் இருந்துள்ளது. போலந்து நாட்டு மலையேறியான Jerzy Kukuczka என்பவர், 7வருடங்கள் ,11 மாதங்கள்,14 நாட்களுக்கு முன்பு இச் சாதனையை நிறுவியிருந்தார். (1987இல்). இதற்கு முன்பு இத்தாலியரான Reinhold Messner என்பவர்தான் 1986இல் முதற் தடவையாக இப்படி 8 மலைகளில் ஏறிச் சாதனை புரிந்திருந்தார்....



## கனடா பல்லின பத்திரிகையாளர் அமைப்பின் சேவையாளர் விருது பெற்ற தமிழர்!

கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகம் ( National Ethnic Press and Media Council of Canada ) என்னும் பத்திரிகையாளர்களை பிரநிதித்துவம் செய்யும் மிகப்பெரிய அமைப்பின் சார்பில் வருடா வருடம் நடத்தப்பெறும் 'சேவையாளர் விருதுகள்' வழங்கும் வைபவம் 15.11.2019 வெள்ளி மாலை கனடாவின் ரொரன்ரோ மாநகர சபா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விருது விழாவில் ரொரன்ரோ மாநகரத்தின் முதல்வர் ஜோன் ரோரி மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் சுற்றுலாத்துறை மற்றும் கலாச்சார அமைச்சர் திருமதி லீசா மெக்லியட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து விருதுகள் வழங்கும் நேரத்தில் பல்லினங்களைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு மொழிகளில் ஊடகங்களை நடத்துபவர்கள்; மற்றும் சமூகங்களின் நலன்களுக்காக தங்களை அர்ப்பணிப்பவர்கள் என பல வெற்றியாளர்களுக்கு அமைச்சர் திருமதி லீசா மெக்லியட் விருதுகளை வழங்கினார்.

அவர்களில் குறிப்பாக தமிழ் பேசும் அன்பர்களான டாக்டர் கதிர் துரைசிங்கம் மற்றும் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் ஆகியோருக்கு பல்லின சமூகங்களுக்கு சேவையாற்றியோர் என்ற வகைக்குள் அடங்கும் சிறப்பு விருதுகள் வழங்கப் பெற்றன.

இந்த விருதுகளுக்;காக டாக்டர் கதிர் துரைசிங்கம் மற்றும் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் ஆகியோரை 'கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்' அமைப்பின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவரான கனடா உதயன் பிரதம ஆசிரியர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் பரிந்துரை செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பி;டத்தக்கது.

வவுனியூர் இரா.உதயணன்



# இவள் எனக்கு மட்டுமா...

திலகரின் கண்கள் மகள் சோபிதாவையே பார்த்துக்கொண்டிருந்தன. அழுதழுது கண்கள் சிவந்து விட்ட நிலையில் மூக்கை உறுஞ்சிய வண்ணம் சோபிதா எழுந்து தனது அறைக்குள் சென்றாள். சோபிதாவின் நான்கு வயது மகன் அம்மா...அம்மா.. என்று அழுதபடியே அவளைப் பின்தொடர்ந்தான்.

திலகருக்கு கோபம் பொத்துகொண்டு வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை.

“இவளாகத் தேடிக் கொண்டது” தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

மனைவி திரவியம் முழு நாளும் சாப்பிடவில்லை என்று கோப்பிபோட்டுக் கொண்டு வந்து நீட்டினாள். “இப்ப இருக்கிற நிலைக்கு இதுதான் தேவை” என்று திரவியத்தின் மேல் எரிந்து விழுந்தார் திலகர்.

“உன்ர மகளுக்கு எத்தனை தடவை சொன்னனான். காதல் காதல் காதல் எண்டு போய் விழாதை, உனக்கு நல்ல ஒருவனாக பாத்து கட்டி வைக்கிறன் எண்டு, இப்ப என்ன நடந்தது பாத்தியே”

திரவியத்தின் கண்களும் கலங்கிவிட்டன. சோபிதா ரகுவரனைக் காதலித்த போது சோபிதாவின் தங்கை வனிதாவுடன் சேர்ந்து திலகருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியவள்தான் அவரது மனைவி திரவியம்.

அவளும் பாவம்தான். இப்ப கூனிக்குறுகி வார்த்தைகள் வெளிவராமல் கோப்பியை கையிலேந்திய வண்ணம் ஒரு குற்றவாளியாக திலகரின் முன் நிற்கிறாள்.

“இங்கேயிருந்து போ. அவளின்ர வாழ்க்கை நாசமாகப் போறதுக்கு நீதான் முக்கிய காரணம்” திலகர் பெரிதாக கத்தினார்.

“நான் அந்த நேரம் சொன்னதைக் கேட்டிருந்தால் இப்படியொருநிலை அவளுக்கு வந்திருக்குமே. நீங்க மூன்று பேரும் எனக்கு எதிராக நின்றியள். அதுன்ர விளைவுதான் இது.”

வனிதா அறையைவிட்டு வெளியே வந்து எட்டிப்பார்க்க அவளைப் பார்த்து கத்தினார் திலகர்.

அவள் அறைக்குள் ஓடி விட்டாள்.

திலகர் கொழும்பில் நல்ல வேலையில் இருந்தவர். அதுவும் சுங்கவரித் திணைக்களத்தில் பெரிய பதவி வகித்தவர். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் மனைவி திரவியத்துடன் லண்டனுக்கு வந்தவர்.

வனிதா சென்ற வருடம்தான் திருமணம் முடித்தவள். சோபிதாதான் போன்பண்ணி வனிதாவை ரெண்டு நாட்களுக்கு தன்னோடு வந்துநிற்கச் சொல்லி கேட்டதற்கிணங்க கணவன் நரேனுக்கு சொல்லிவிட்டு சோபிதாவின் வீட்டில் வந்து நிற்கிறாள்.

ஒரு பக்கம் திலகரின் கத்தலும் மறுபக்கம் சோபிதா திரவியம் வனிதா ஆகியோரின் அழுகையும் அந்த வீட்டை ஒரு மரணவீடு போன்று காட்சியளிக்கச்செய்தது.

சிறிது நேரம் கழித்து திலகரின் நண்பன் சத்தியன் திலகரைத் தேடி வீட்டிற்கு வந்தார்.

இருவரும் முப்பது வருட நண்பர்கள். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்டவர்கள். சத்தியன்சென்றவருடம்தான் மகளின் வேண்டுகோளிற்கு இணங்க லண்டன் வந்து மகளோடும் மருமகனோடும் வாழ்ந்து வருகிறார். சத்தியனின் மனைவி இறந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

திலகரின் அருகில் இருந்த சத்தியன் வலது கையைப் பிடித்தார். திலகரின் கையிலேற்பட்ட நடுக்கத்தை சத்தியன் உணராமலில்லை.

சத்தியா எங்கட நாட்டிலதான் எங்கட சனத்திற்கிடையில கலாச்சார பண்பாட்டுச் சீரழிவு என்றால்இங்க அதைவிட மோசமாக இருக்கு.

இங்க கையில நிறையப் பணமும் வசதியும் வந்தால் எதையும் செய்துவிடலாம் என்ற நினைப்பு ஒரு சிலருக்கு.

ஊரில பணமில்லாததால சீரழிவு ஏற்படுகுது. இங்க பணமும் வசதியும் கூடுதலாக இருக்கிறதால எங்கட சனங்கள் சீரழியுது.

சத்தியன் ஒன்றும் சொல்லாமல் திலகரின் கையைப் பிடித்தபடியே அமர்ந்திருந்தார்.

“அந்தஅறுவானை என்ர மருமகன் எண்டுசொல்லக்கூட வெட்கமாக இருக்கு. இவனுக்கு இப்படியெல்லாம் கேவலம் கெட்ட நினைப்பு வரும் எண்டு யாருக்குத் தெரியும்”

“எங்க ரகுவரன்?” சத்தியன் கேட்க

சூல கணங்கள்சத்தியனையே கண்வெட்டாமல் பார்த்தார் திலகர். அவரது கண்கள் கலங்கியதை சத்தியன் அவதானிக்கத் தவறவில்லை.

“அவனை இந்த வீட்டுப்பக்கம் வரவேண்டாமென்று சொல்லிப் போட்டன்”

“அவனுக்கு இந்த வீட்டில உரிமையிருக்குத்தானே” சத்தியன் இழுத்தார்.

“அந்த அறுவானுக்கு நல்ல பாடம்படிப்பிக்கப் போறன். அவனுக்கு சோபிதாவிலேயே உரிமை இல்லாமல் ஆக்கப்போறன். பிறகு வீட்டில என்ன உரிமை”

“என்ன சொல்லவாறாய் திலகர்” சத்தியன் வரண்டுவிட்ட குரலுக்கு உமிழ்நீரைப் பாச்சிய வண்ணம் கேட்டார்.

“சோபிதா இனி இப்படிக்கேடுகெட்ட போக்குக்கொண்டவனோடசேர்ந்து வாழமாட்டாளாம். விவாகரத்துத்தான் வேணுமாம்.”

“நீ அதுக்கு என்ன பதில் அவளுக்கு சொன்னனி” சத்தியன் கேட்க.

“உன் விருப்பப்படியே செய் என்று சொல்லிப்போட்டன்.” தயக்கமின்றி சொன்னார் திலகர்.”

“எதுக்கும் நன்றாக யோசிச்சு முடிவெடுக்கவேணும். அவசரப்படக்கூடாது” சத்தியன் சொல்ல திலகர் நிமிர்ந்து சத்தியனைப் பார்த்தார்.

நாங்கள் கொழும்பில வேலைசெய்த காலத்தில் கார் திறப்பு மாத்திர கதை நீயும் கேள்விப்பட்டிருப்பாய்தானே.

“நீ என்ன கொழும்பில அந்தக் காலத்தில நடந்த சீரழிவுகளை பற்றி சொல்ல வாறியே” “என்ன இப்ப தீருமே”

“இல்லையடா. இந்த வசதி கூடின பணக்காரர் ஒரு சிலர் செய்த வேலைகளைத்தான் சொல்லுறன்”

“கார் திறப்புகளை ஒன்றாப் போட்டு குலுக்கிப் போட்டு ஒவ்வொருவனும் தான் எடுத்த கார் திறப்புக்கு சொந்தமானவனின்ர மனிசியை ஒரு இரவைக்கு கொண்டுபோற விசயத்தை பற்றித்தான் சொல்லுறன்.”

“அதுதான் பலருக்கும் அந்தக்காலத்தில தெரிந்த விசயமாச்சே”

“அவளவயளும் ஒத்துத்தானே போயிருக்கிறாளவையள்”

“அதெல்லாம் ஒரு தகுதிக்கு மேல நடக்கிற விசயம்” சத்தியன் சொன்னார்.

“இல்ல ஏன் அதைப்பற்றி கதைக்கிறாய்” மீண்டும் சத்தியன் கேட்க.

“ஏன் இதை உதாரணமாக சொல்லவாறன் எண்டு உனக்கு விளங்கேல்லையே? திலகர் குரலை அடக்கி சத்தியனுக்கு சொன்னார்.

“விளங்குது...விளங்குது” என்ர மருமகன் என்ற அறுவான் இப்படித்தானே செய்ய யோசித்திருக்கிறான்.


“சொந்த மனிசியிட்ட வந்து அதுவும் ஒரு பிள்ளை இருக்கத்தக்கதாக தன்ர சினேகிதனோட போய்ப்படு அவனின்ர மனிசியோட நான் ஒரு நாளைக்கு இருக்கிறன் எண்டு ஒரு கூச்சம் வெட்கம் இல்லாமல் கேட்டிருக்கிறானே, இவனையெல்லாம் வெட்டிப்போட வேணும். அதுவும் விரும்பிக் கலியாணம் செய்துபோட்டு இப்படிக் கேட்டிருக்கிறானே.”

“அப்படி அவன் கேட்டது மிகமிகப் பெரிய தப்புதான் திலகர். ஒருவன் தன் பலவீனங்கள் தன்னைக் கட்டுப்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேணும். அவன் பலவீனமானவன்தான். பாத்தியே வெளிநாட்டில வசதிகளும் பணமும் கூடக்கூட புலன்களும் வேற பாதையில போகப்பாக்குது.”

திலகர் தலையைத் தலையை ஆட்டினார்.

இப்படிப்பட்டவங்களை திருத்த இயலாது சத்தியா. திரும்ப திரும்ப இதைப்பற்றித்தான் யோசிப்பாங்கள். அதோட மனைவிக்கு நேர்மையான உண்மையானவர்களாக இருக்கவே மாட்டாங்கள்.”

“நீ சொல்லுறது சரிதான். எல்லாமே மாறிக்கொண்டு போகுது. நீ சோபிதா வனிதா திரவியம் எல்லாரும் அவசரப்படாமல் கதைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வாங்கோ. அவ்வளவுதான் எனக்கு சொல்ல முடியும்.” சத்தியன் சொல்லிவிட்டு எழும்பி வாசற்படிகளை நோக்கி நடந்தார். ●





# 2020ம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

ஒவ்வொரு ஆண்டும் மலரும்போது, எங்களின் மனங்களில் இந்த ஆண்டு எங்களுக்கு எப்படி இருக்கும்? எனும் கேள்வி எழுந்து கொண்டே இருக்கும். இது மனித இயல்பு. பொதுவாகவே ஜோதிடம் ஒருபோதும் பொய்யாகாது. அது எமக்கு உரிய பலன்களை, எமது வினைகளுக்கு ஏற்ப தந்து கொண்டேயிருக்கும். ஒருவரின் பிறப்பு ஜாதகம் சரியாக கணிக்கப்பெற்று அது தகுந்த ஜோதிடரின் மூலம் ஆராயப்பட்டு பலன்கள் கூறும்போது, நூறு வீதம் அது சரியாகவே அமையும். எமது மனித மனம், ஒரு நிலையில்லாதது. தேடலை மிக அதிகமாக கொண்டது. எல்லோருமே தமது வாழ்வு நலம் பெற வேண்டும் எனும் அதீத அக்கறை கொண்டவர்களே. வருடம் தோறும், கிரஹ பெயர்ச்சிகள் அமையும் போது, பலாபலன்கள் மாறுதல் அடையும். இந்த 2020ம் ஆண்டு மூன்று கிரஹபெயர்ச்சிகள் அமையும்போது, பலாபலன்கள் மாறுதல் அடையும். இந்த 2020ம் ஆண்டு மூன்று கிரஹபெயர்ச்சி அமைகின்றது. 02.09.2020ல் சாயக்கிரஹங்கள் எனப்படும் ராகு, கேது கிரஹங்கள் முறையே ராகு மிதுன ராசியில் இருந்து இடப ராசிக்கும், கேது தனுசு ராசியில் இருந்து விருட்சிக ராசிக்கும் பெயர்ச்சி பெறுகின்றன.

அதேபோல 15-11-2020லன்று குருபகவான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு பெயர்ச்சி பெறுகின்றார். 26-12-2020ல் சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு பெயர்ச்சி பெறுகின்றார். இந்த கிரஹபெயர்ச்சிகளின் மூலமாக பன்னிரு ராசிகளின் பலன்களும் மாறுபட்டு அமையும். எமது மூதாதைய முனிசிரேஸ்டர்கள் தமது தவஞான வலிமையால் கணித்து வாய்வழி சொன்ன பாடல்களே 'வாக்கிய கணிதம்''. எந்த விஞ்ஞான யுகத்திலும், இந்த வாக்கிய கணிதம் ஆச்சரியம் தருகின்ற அற்புத கணித சித்தாந்தம். இதையே இன்றளவும் நமது சமய அனுட்டானம், ஆலய விரத நிர்ணயம் என்பன கைக்கொள்ளும் மரபு தொடர்கின்றது. ஜோதிட சாஸ்த்திர பலன்கள் மிகச்சரியாக அமைவதும் வாக்கிய கணித முறையே.

அந்த வாக்கிய பஞ்சாங்க கணிதப்படி மேற்படி அமையும் கிரஹ பெயர்ச்சிகள் இந்த 2020ம் ஆண்டில் உங்கள் எல்லோருக்கும் அனுகூலமான சிறப்புகளும் நன்மைகளும் கொடுக்க வேண்டும். அதற்கு எல்லோரும் மனித நேயத்தோடும், குலதெய்வ வழிபாடு, பிதுர் வழிபாடு, தான தர்மம், இவற்றை சரியாக செய்து, கிரஹங்களின் அதீத தாக்கம் ஏற்படாமல் காத்துக்கொள்ள முடியும். எல்லோரும் நலமுற அன்னை பராசக்தி அருள் பொழியட்டும்.




"ஜோதிட பூஷணம்"
**சிவசக்திஸ்ரீ கலாநிதி. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்**
சாரதா பீடம் ஜோதிடம்
துன்னையூர்– கொழும்பு.
தொலைபேசி: 0112554328. 0777915685


## மேட ராசி



**(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)**

*மனதார எல்லோருக்கும் உதவி செய்யும் மேடராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு எப்படி இருக்கும்?. உங்களின் ராசிக்கு ஆண்டின் முற்பகுதி மிகமிக சிறப்பாக அமையும். குருவின் பாக்கியஸ்தான சஞ்சாரம், சனீஸ்வரன் பாக்கியஸ்தான சஞ்சாரம் என இரண்டுமே மிகவும் சிறப்பாக அமைகின்றது.*

*தொழில்நிலைச்சிறப்பு, திருப்திகரமான பணவரவு, வழக்கு விவகாரங்களில் வெற்றி, திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் நிறைவாக அமையும் நிலை. புதிய முயற்சிகளிலே சிறப்பான வெற்றிகள் என தொட்டது எல்லாமே துலங்கும் காலமாய் அமையும். 2020ம் ஆண்டிலே பலவித நன்மைகளை, சிறப்புகளை நீங்கள் பெறக்கூடிய நிலைகள் சிறப்பாக அமையும் பலனுண்டு. உங்களின் நீண்டகால திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். 02.08.2020 புதன்கிழமை அமைகின்ற ராகு, கேது பெயர்ச்சி உங்கள் ராசிக்கு ராகு 2ம் இடம், கேது 8ம் இடம் என அமைவது சற்று மந்தமான பலன்களைக் கொடுக்கும்.*

*15-11-2020 ஞாயிறு குருப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு ஜீவனஸ்த்தானமாகிய 10ம் இடம் அமைகின்றது. தொழில்சார்ந்த அலைச்சல் இடமாற்றங்கள் அமையும். ஆண்டின் நிறைவு வாரம் 26-12-2020 சனிப்பெயர்ச்சி அமையும். இதுவும் உங்கள் ராசிக்கு தொழில்சார்ந்த சிக்கல் அமையும். எனவே 2020 அக்டோபர் மாதம் வரை உங்களின் ராசி நிலைக்கு மிகவும் சிறப்பான நன்மைகள் அமையும். 90% நீங்கள் நற்பலன் பெறும் நிலை உண்டு.*

## இடபராசி



**(கார்த்திகை 2, 3, 4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதம்)**

*தனித்துவமாய் உங்களை அடையாளப்படுத்த போராடும் குணம் கொண்ட இடபராசி அன்பர்களே! 2020ம் ஆண்டு உங்கள் ராசி நிலைக்கு சற்று சிரமமான பலன்களே அதிகமாய் இருக்கும். குடும்ப நிலையில் தேவையற்ற வீண் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிருக்கும். தொழில்சார்ந்த வேலைப்பளு, தொழில்நிலை பதவி துறப்பு. உடல்நிலை சார்ந்த உபாதைகள், கடன் பிரச்சனைகள், எதிர்பாராத திடீர் சத்திர சிகிச்சை போன்ற பலன்கள் ஏற்படும் நிலையிருக்கும். உங்கள் ராசிக்கு அட்டமத்து குரு, அட்டமத்து சனி என அமைவதனால், பலவித பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும். எனவே, மிகவும் பொறுமை நிதானம் கொண்டு செயற்படுவதே நல்லது. திருமணம் போன்ற சுபகாரிய பலன் எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் தடைகள் தாமத இழுபறி நிலைகள் என அமையும். எனவே உங்கள் எதிர்பார்ப்புகளில் சற்று சிக்கல் நிலை இருக்கும். 02.09.2020ல் அமையும் ராகு, கேது பெயர்ச்சியும் உங்களுக்கு சிரமமானதாகவே இருக்கும். 15.11.2020ல் அமையும் குருப்பெயர்ச்சி உங்களுக்கு அப்பாடா! எனும் நிம்மதி பெருமூச்சு விட வைக்கும். ஆண்டு நிறைவில் 26-12-2020ல் அமையும் சனிப்பெயர்ச்சியும் நன்மையாகவே அமைகின்ற நிலையிருக்கும். இவை எல்லாம் ஆண்டு பிற்பகுதி நிறைவில் அமைவதனால் 2020ம் ஆண்டு உங்கள் ராசிக்கு அதிகமான சிரமங்களைக் கொடுக்கும். இந்த ஆண்டு 40% நன்மைகளே நீங்கள் பெறலாம்.*

## கடகராசி



**(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)**

*தம் காரியங்களில் கவனமாக செயல்பட்டு வெற்றிகள் பெறும் ஆற்றலுடைய கடகராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2020ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூல பலன்கள் கொடுக்கும் நிலையுண்டு. தொழில் நிலை சார்ந்த சிறுசிறு பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிருக்கும். குடும்ப நிலையில் இடையிடையே சிறுசிறு சிரமங்கள், மனச்சஞ்சல நிலை என்பன ஏற்படும் நிலையிருக்கும்., சனீஸ்வரனின் 6ம்இட சஞ்சாரம் திடீர் நன்மைகள், மகிழ்வு தரும் பலன்களை ஏற்படுத்துகின்ற நிலையும் இருக்கும். குருவின் 6ம் இட சஞ்சாரம் அலைச்சல், இழுபறி நிலைகளை ஏற்படுத்தும். புதிய முயற்சிகளில் சிக்கல் நிலைகள் அமையும். எதிர்பாராத திடீர் கடன் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைகள் ஏற்படும். 02.09.2020லன்று உங்களின் ராசிக்கு ராகு கேது கிரஹங்கள் முறையே ராகு 11ம் இடமும் கேது 5ம் இடமும் அமைகின்றன. இந்தப் பெயர்ச்சி அனுகூலமான நற்பலன்களைக் கொடுக்கும் நிலையிருக்கும். 15-11-2020ல் அமையும் குருப்பெயர்ச்சி களத்திரஸ்தானமாகிய 7ம் இடம் அமைவதன் மூலம் எதிர்பாராத சிறுசிறு திடீர் நன்மைகள் அமையும் பலன் இருக்கும். ஆண்டின் நிறைவிலே அமைகின்ற*

சனிப்பெயர்ச்சி 26.12.2020 லன்று உங்களின் ராசி நிலைக்கு 7ம் இடம் அமைவதும் மத்திமமான பலனே கொடுக்கும். எனவே பொதுவாக இந்த 2020ம் ஆண்டு உங்களுக்கு பெரும் சிறப்புகள், நன்மைகள் அமையும் பலன் மிகவும் குறைவே. ஓரளவிற்கு சிறு நன்மைகள் இடையிடையே அமையும் பலன் இருக்கும். அதற்கு ஏற்ப செயல்பட்டு வெற்றிகளை பெற வேண்டும். 2020ம் ஆண்டு 50% நன்மைகள் அமைய இடமுண்டு.

## மிதுனராசி



**மிருகசீரிடம் 3,4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதம்)**

அமைதியாக செயற்பட்டு அனைத்துக் காரியங்களிலும் வெற்றியீட்டும் மிதுனராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு இந்த 2020ம் ஆண்டு முற்பகுதி மிகவும் அனுகூலமாக அமைய பலனுண்டு. தொழில் நிலை சார்ந்த எதிர்பாராத திடீர் நன்மைகள் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளைப் பூர்த்தியாக்கும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் அனுகூலமானதாக அமையும் பலனுண்டு. எதிர்பார்ப்புகளில் இடையிடையே சிறுசிறு தடை, இழுபறி நிலைகள் ஏற்படும் பலனிருக்கும். பொதுவாக சனீஸ்வரனின் 7ம் இட சஞ்சாரம் இடையிடையே சற்று சிரமமான பலன்களைக் கொடுக்கின்ற நிலையிருக்கும். 2020 செப்டெம்பர் 2ம் திகதி அமையும் ராகு, கேது பெயர்ச்சி உங்களுக்கு எதிர்பாராத திடீர் நன்மைகளைக் கொடுக்கும் நிலையிருக்கும். எனவே அக்டோபர் மாதம் வரை உங்களின் ராசி நிலைக்கு பெரும் சிரமங்கள் அமைய இடமில்லை. 15.11.2020 லன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்கள் ராசி நிலைக்கு சற்று சிரமங்களைக் கொடுக்கும் நிலை இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை அமையும். ஆண்டின் நிறைவில் 26.12.2020லன்று அட்டமத்து சனி சஞ்சாரம் ஆரம்பம். எனவே அதன்பின்னர் எந்த விடயமாயினும் சற்று பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். பெண்களுக்கு மனச்சஞ்சலம், மாணவர்கள் கல்வியில் மந்த நிலை, தொழில்சார்ந்த பிரச்சனைகள் என பலவகையிலும் சிக்கல் நிலைகள் அமைந்திருக்கும். எனவே 2020 உங்களுக்கு 65% நன்மைகள் உண்டு.

## சிம்மராசி



**(மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)**

ஆளுமையுடன் எதையும் சாதிக்கும் குண இயல்பைக் கொண்ட சிம்மராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு அனுகூலமான நன்மைகள் அமையும், பணபலன் ஏற்படும். தொழில் நிலையில் அனுகூலமான நன்மைகள் இருக்கும். குடும்பத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் பலன் இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றிகள் அமையும் நிலையிருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் அனுகூலமானதாக அமையும். வெளிநாட்டு பிரயாணங்கள் அமையும் பலாபலனும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான நிலை ஏற்படும். பெண்களுக்கு மனமகிழ்வான பலன்கள் அமைந்திடும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றகரமான பலனிருக்கும். பொதுவாக ஆண்டின் முற்பகுதியில் உங்களுக்கு ஏற்றமான நற்பலன்களுக்கு அதிகமாக இடமுண்டு. 02.09.2020 லன்று அமையும் ராகு, கேது பெயர்ச்சி முறையே ராகு 10ம் இடமும், கேது 4ம் இடமும் அமைவது சற்று மத்திமமான பலன்களைக் கொடுக்கும். அலைச்சல் நிலைகள் சற்று அதிகமாக அமைந்திருக்கும். 15.11.2020 லன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு ரோகஸ்த்தானமாகிய 6ம் இடம் அமைவது, மனதில் சஞ்சலமான பலன்களை கொடுக்கும். உடல்நிலையில் சிறுசிறு உபாதைகக்கள் மருத்துவ செலவு ஏற்படுத்தும். ஆண்டின் நிறைவில் 26.12.2020 லன்று அமையும் சனிப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு 6ம் இடம் அமைவது, எதிர்பாராத திடீர் நன்மைகளைக் கொடுக்கும். பொதுவாகவே 2020ம் ஆண்டின் முற்பகுதியிலே அதிகமான நன்மைகளை பெறமுடியும். உங்கள் ராசிக்கு 80% நன்மைகளை பெற முடியும்.

## கன்னிராசி



**(உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம், சித்திரை 1,2ம் பாதம்)**

எப்போதும் சிந்தனையும், போராட்டமும் கொண்ட கன்னி ராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு சற்றுப் போராட்டமான நிலைகளையே கொடுக்கும். தொழில்சார்ந்த வேலைப்பளு அதிகமாக இருக்கும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமைகின்ற நிலையிருக்கும். காரியத்தடை தேவையற்ற அலைச்சல் போன்ற நிலையிருக்கும். எந்த விடயமாயினும் சற்று பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டும். மனச்சஞ்சல நிலை, உடல்நிலையில் சிறுசிறு சுகயீனம் என்பன இடையிடையே ஏற்பட்டு மறையும் பலனுண்டு. தாயார் மூலமும் செலவீனங்கள் அமைய இடமுண்டு. திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்ப்பவர்க்கு அப்பலன் சற்று இழுபறி நிலையைக் கொடுக்கின்ற நிலையிருக்கும். பெண்களுக்கு மனப்போராட்ட நிலை அதிகமிருக்கும். மாணவர்கள் சற்றுக் கூடுதலான கவனம் எடுக்க வேண்டும். 02.09.2020 லன்று அமையும் ராகு, கேது பெயர்ச்சி உங்களின் ராசிக்கு முறையே ராகு 9ம் இடம், கேது 3ம் இடம் என அமைவது எதிர்பாராத திடீர் நன்மைகள், அதிர்ஷ்ட பலன்கள் அமைய இடமுண்டு. அத்தோடு 15.11.2020 லன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களுக்கு மிகவும் அனுகூலமானதாக நற்பலன்களைக் கொடுக்கும். ஆகவே ஆண்டின் பிற்பகுதி உங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய நிலைகள் இருக்கும். எல்லாவகையிலும் சிறப்பும், மகிழ்வும் அமையும் ஆண்டின் நிறைவில் அமையும் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சிறுசிறு சிரமங்களை கொடுக்கும் நிலை இருக்கும். பொதுவாக ஆண்டின் முற்பகுதியிலே பொறுமை நிதானமுடன் செயற்பட வேண்டும். இந்த ஆண்டில் 55% நன்மைகள் உங்களுக்கு உண்டு.

## துலாராசி



**(சித்திரை 3, 4ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3ம் பாதம்)**

எதையும் நேர்மையாக திடகாத்திரமாக செய்யும் ஆற்றலும் குணமும் கொண்ட துலா ராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு 2020ம் ஆண்டு சற்று மத்திமமானதாகவே அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறுசிறு தடைகள், தாமத நிலைகள் இருக்கும். தொழில் நிலைகளில் சற்று சிக்கல் நிலைகள் அமையும். குடும்ப நிலைகளிலும், மனச்சஞ்சல நிலை, இழுபறி நிலை அமையும். புதிய முயற்சிகளில் சற்று இழுபறியான பலன்கள் இருக்கும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமையும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலையிருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் சற்று மத்திமமானதாகவே அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டும். 02.09.2020 லன்று அமையும் ராகு, கேது பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு மத்திமமானதாகவே அமையும் நிலையுண்டு. உடல்நிலை உபாதைகள், தொழில்நிலை சிரமங்கள் ஏற்படும். 15.11.2020ல் அமையும் குருப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு சுகஸ்த்தானமாகிய 4ம் இடம் அமைவது எதிர்பாராத திடீர் சுகயீனங்கள், தேவையற்ற வீண் அலைச்சல் நிலைகள் அமையும். ஆண்டின் நிறைவுகளில் அமையும் சனிப்பெயர்ச்சி 26-12-2020 லன்று உங்கள் ராசிக்கு கண்டார்த்தசனியாக 4ம் இடத்திலே அமைகின்றது. இதுவும் உங்களின் ராசி நிலைக்கு மத்திமமான, சுமாரான பலன்களையே கொடுக்கும். அலைச்சல் நிலை சற்று அதிகமாகவே அமையும். எனவே பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். 2020ம் ஆண்டிலே பெரும் நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. சிரமமான நிலைகள் இருக்கும். இந்த ஆண்டு 45% நன்மைகள் அமையும்.

## விருட்சிகராசி



**(விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை)**

வலுவான சிந்தனையும் செயல்பாடும் கொண்ட விருட்சிகராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும் நிலை உண்டு. குடும்ப நிலையில் எதிர்பாராத நன்மைகள் இருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். தொழில்சார்ந்த முன்னேற்றமிருக்கும். எதிர்பாராத நன்மைகள் அமையும் பலனிருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் நிறைவாக அமைகின்ற நிலையிருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலன் அமையும். ஏழரைச்சனி சஞ்சாரம் கடைக்கூற்று நிலையாக அமைவதால் திடீர் நன்மைகளைக் கொடுக்கும் நிலை அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் அனுகூலமான பலனிருக்கும். 02.09.2020 லன்று அமைகின்ற ராகு, கேது, பெயர்ச்சியின் மூலமாக திடீர் நன்மைகள் அமையும் பலனிருக்கும். ஓரளவிற்கு எதிர்பார்ப்புகளில் வெற்றிகள் அமையும் நிலையிருக்கும். 15-11-2020 அமையும் குருப்பெயர்ச்சி சற்று சிறுசிறு சிரமங்கள் கொடுக்கும் நிலையிருக்கும். இருப்பினும் எதையும் சமாளித்து செயற்படக்கூடிய அனுகூலம் இருக்கும். ஆண்டின் நிறைவிலே 26.12.2020லன்று அமையும் சனிப்பெயர்ச்சியுடன் ஏழரைச்சனி நிறைவு பெறும். அதன்பின் அனுகூலமான நன்மைகள் அமையும். எப்படியும் எதிர்பார்ப்புகளில் நல்ல வெற்றிகள் இருக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றல் அமையும். இந்த ஆண்டிலே உங்களுக்கு சிறப்புகள் உண்டு. 80 % நன்மைகள் அமையும் நிலையுண்டு.

## தனுசு ராசி



**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

தைரியமான செயலும் குணமும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2020ம் ஆண்டு சற்று மத்திமமானதாகவே அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் எதிர்பாராத திடீர் பிரச்சனைகள் அமையும் பலனிருக்கும். குடும்ப நிலையில் தேவையற்ற பிரச்சனைகள் ஏற்படும். பணவரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் ஏதாவதொரு சிக்கல்கள் பிரச்சனைகள் அமையும் நிலையிருக்கும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் சற்று மத்திமமானதாகவே அமையும். பெண்களுக்கு மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சனைகள் என்பன ஏற்படும். மாணவர்களின் கல்வி நிலையில் குழப்ப நிலைகள் இருக்கும். சற்றுக் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டும். 02.09.2020லன்று அமைகின்ற ராகு, கேது பெயர்ச்சியானது எதிர்பாராத திடீர் நன்மைகள் கொடுக்கும் நிலையிருக்கும். இருப்பினும் ஜென்மகுரு சஞ்சாரமும், ஏழரைச்சனி நடுக்கூற்று சஞ்சாரமும் எதிலும் ஒரு போராட்ட நிலையை கொடுக்கும். 2020 செப்டெம்பர் 15ம் திகதி அமைகின்ற குருப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு தனஸ்த்தானமாகிய 2ம் இடத்திலே அமைவதன் மூலமாக ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலையிருக்கும். தொழிலில் சிறுசிறு நன்மைகள், சிறப்புகள் அமையும். எதையும் சமாளிக்கக் கூடிய ஒரு நிலை உருவாகும் பலனிருக்கும். 26.12.2020 லன்று அமையும் சனிப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு ஏழரைச்சனி கடைக்கூற்று சனியாக அமைகின்றது. எனவே 2020ல் அமையும் முற்பகுதி உங்களுக்கு பலவகையிலும் அலைச்சல் கொடுக்கும். இந்த ஆண்டில் 40% நன்மைகளை நீங்கள் பெறலாம்.

## மகரராசி



**(உத்தராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதம்)**

மனதிலே எதையும் வைக்காமல் வெளிப்படையாக பேசுகின்ற சுபாவமும், செயலும் கொண்ட மகர ராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு சற்று சுமாரான, மத்திமமான பலனே கொடுக்கும். அலைச்சல் நிலைகள் அதிகமாக இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை அமைந்திருக்கும். குடும்ப நிலையில் சிறுசிறு பிரச்சனைகள் சூழும். தொழில்நிலை சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். எதிர்பாராத திடீர் செலவீனங்கள் அமையும் பலனும் அமைந்திருக்கும். பொதுவாக எந்த விடயமாயினும் சற்று போராடியே ஜெயிக்க வேண்டிய நிலையிருக்கும். உங்கள் ராசிக்கு ஏழரைச்சனி சஞ்சாரமும் குருவின் விரயஸ்த்தான சஞ்சாரமும், சற்று சிக்கலான நிலைகளை கொடுக்கும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்நோக்குவோர்கட்கு அப்பலன் சற்று மத்திம இழுபறி நிலைகளைக் கொடுக்கும். பொறுமை நிதானமுடன் செயற்பட வேண்டும். 02.09.2020 அமையும் ராகு, கேது பெயர்ச்சியானது உங்களின் ராசிக்கு சற்று மத்திமமானதாகவே இருக்கும். கேதுவின் 11ம் இட சஞ்சாரம் திடீர் நன்மைகள் கொடுக்கும். 15.11.2020 லன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு ஜென்ம சஞ்சாரமாக அமைகின்றது. உடல்நிலை உபாதைகள், மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சனைகள் போன்ற பலாபலன்கள் அமையும். ஆண்டின் இறுதிப்பகுதியில் 26.12.2020லன்று அமையும் சனிப்பெயர்ச்சியானது ஏழரைச்சனி ஜென்மசனி சஞ்சாரமாக அமைகின்றது. எனவே தேவையற்ற சஞ்சலங்களை, பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே அதற்கு ஏற்ப நிதானத்துடன் செயற்பட வேண்டும். 2020ம் ஆண்டு 40% நன்மைகள் அமையும்.

## கும்பராசி



**(அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதம்)**

எதிர்காலத்தை திட்டமிட்டு அதற்கு ஏற்ப சாணக்கியமாய் செயற்படும் ஆற்றல் கொண்ட கும்பராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2020ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமான வெற்றிகளும், சிறப்புகளும் கொடுக்கும். தொழில்நிலை சார்ந்த வெற்றிகள், நன்மைகள் சிறப்பாக அமையும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். குடும்ப நிலையில் எதிர்பாராத நன்மைகளும் சிறப்புகளும் இருக்கும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்நோக்குவோர்க்கு அப்பலன் அனுகூலமானதாக அமையும். கடன் நிலைகளில் சுமுகமான நிலைகள் இருக்கும். தொழில்நிலை முன்னேற்றம் சிறப்பாக அமையும். எல்லாவகையிலும் ஆண்டின் முற்பகுதியினிலே உங்களுக்கு அனுகூலமான நன்மைகள் அமையும். 02.09.2020 லன்று அமையும் ராகு, கேது பெயர்ச்சியானது, திடீர் நன்மைகள் தருவதாய் அமையும். கொடுக்கல் வாங்கல்களில் அனுகூல நிலையிருக்கும். பெண்களுக்கு மனமகிழ்வும் நன்மைகளும் ஏற்படும். மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றங்கள் அமையும். 15.11.2020 அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு மத்திமமானதாகவே இருக்கும். வேலைப்பளு, தொழில்சார்ந்த பிரச்சனை, திடீர் செலவுகள் என்பன ஏற்படும். ஆண்டின் நிறைவில் 26.12.2020லன்று அமையும் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு ஏழரைச்சனி சஞ்சாரம் ஆரம்பமாகின்றது. எனவே ஆண்டின் பிற்பகுதி பலவகையிலும் சிரமங்களைக் கொடுப்பதாய் அமையும். எனவே 2020ம் ஆண்டின் முற்பகுதி உங்களுக்கு மிக சிறப்பான அனுகூலமான பலன்களைக் கொடுக்கும். இந்த ஆண்டில் 75% நன்மைகள் அமையும்.

## மீனராசி



**(பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி)**

மிகவும் சாதுர்யமாகவும், சாணக்கியமாகவும் செயற்படும் மீனராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு 2020ம் ஆண்டு அனுகூலமானதாக அமைகின்ற நிலை இருக்கும். தொழில்சார்ந்த அலைச்சல், வேலைப்பளு என்பன அதிகமாக அமைந்திருக்கும். குடும்ப நிலையில் சிறுசிறு குழப்ப நிலைகள் ஏற்படும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று அலைச்சல் நிலை அதிகமாக அமைந்திருக்கும். எதிர்பாராத திடீர் பிரயாண நிலைகள் அமையும். தலயாத்திரைகள் அமையும் பலனும் இருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு சற்று இழுபறி, தாமத நிலைகள் அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் மந்தமான பலன்கள் இருக்கும். 02.09.2020 லன்று அமையும் ராகு, கேது, பெயர்ச்சி உங்களின் ராசிக்கு நல்ல அனுகூலமான பலன்களைக் கொடுக்கும். பொதுவாக சிறுசிறு பிரச்சனை, அலைச்சல் நிலைகள் அமையும். ஓரளவிற்கு அனுகூலமான நன்மைகள் அமையும் பலன் இருக்கும். 15.11.2020 லன்று அமைகின்ற குருப்பெயர்ச்சி லாபஸ்த்தானமாகிய 11ம் இடம் அமைவது எல்லா வகையிலம் நன்மைகள் கொடுக்கும் நிலை அமையும். தொழில் நிலை லாபங்கள் மேன்மையுறும். உங்களின் ராசிக்கு 26.12.2020 லன்று அமையும் சனிப்பெயர்ச்சி லாபஸ்த்தானமாகிய 11ம் இடம் எல்லாவகையிலும் ஆண்டின் பிற்பகுதி உங்கள் ராசிக்கு சிறப்பான பலன்களைக் கொடுக்கும். இந்த ஆண்டில் 65% நன்மைகள் அமையும். ●

# கணவர் பிரச்சினையைத் தன்னதாக்கி வெற்றி கண்டார்!

வீடியோ ஜாக்கி ஐஸ்வர்யா பிரபாகரை யாரும் மறந்திருக்க முடியாது. தமிழக முன்னணி தொலைக்காட்சிகளில் ரியாலிட்டி ஷோக்களில் அழகாகக் கலக்கியவர். திருமணம் முடிந்து அமெரிக்காவில் செட்டிலாகிவிட்ட ஐஸ்வர்யா, தன் அனுபவத்தை மனம் திறந்து பேசினார்.

“16 வயசிலேயே நான் சேனலுக்கு வந்துட்டேன். 24 வயசுல எனக்கு கல்யாணமாச்சு. வீட்ல பார்த்து வெச்சவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அதாவது, கல்யாணத்துக்கு அப்புறம்தான் நாங்க ஒருத்தரையொருத்தர் தெரிஞ்சுக்க வேண்டிய நிலைமை. அவரை மட்டுமே நம்பி அமெரிக்காவுக்குப் போனேன்.

வாழ்க்கை நிறைய ஆச்சர்யங்களையும் அதிர்ச்சிகளையும் எனக்கு வெச்சிருந்துச்சு. யெஸ், அமெரிக்கா போனதுக்கப்புறம்தான், பொருளாதார ரீதியா என் கணவர் ரொம்ப மோசமான நிலைமையில் இருந்தாருன்னு எனக்குத் தெரியவந்தது. அவரோட பணத்தையெல்லாம் அவருடைய சொந்தக்காரங்களே ஏமாத்தி வாங்கிட்டிருக்காங்க. கிட்டத்தட்ட அவரோட பேங்க் அக்கவுன்ட் சுத்தமா துடைச்ச நிலைமைதான். திவால்னு சொல்வாங்களே, அப்படியொரு நிலைமையிலதான் அவர் அப்போ இருந்தார். திருமணம் முடிந்த ஒரு வருஷம் முழுக்க ஹனிமூன் பீரியட்னு சொல்வாங்க. ஆனா, எங்களுக்கு அது ரொம்ப குழப்பமான பீரியட்.

அவரைக் குறை சொல்றதைவிட, அவரோட கஷ்டத்துல நானும் பங்கெடுத்துக்கணும்னு நினைச்சேன். ரெண்டு பேரும் சேர்ந்து ஹார்ட் வொர்க் பண்ணோம். கொஞ்சம் கொஞ்சமா எங்க எல்லாப் பிரச்னைகள்லேருந்தும் மீண்டும் வந்துட்டோம்” என்கிறார், செம பாசிட்டிவ்வாக.

இப்படியொரு சூழ்நிலையில், ‘உன் பிரச்னைகளையெல்லாம் மறைச்சு என்னை ஏன் ஏமாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்டே’ன்னு சண்டை போடுவதுதான் இயல்பாக நடக்கிற விஷயம். ஆனால், தன் இணையின் பிரச்னையைத் தன்னுடையதாக நினைத்து துணை நின்ற ஐஸ்வர்யா கிரேட் தான்!

*-சாந்தி கணேஷ்.*





சிவபரிமேலழகர்



# வீட்டுக்கு வீடு நாவலர் அவர் நாட்டுக்கு நாடு காவலர்

வீட்டுக்கு வீடு நாவலர் அவர் நாட்டுக்கு நாடு காவலர் இலங்கை எனும் ஈழமணித் திருநாட்டில் காலாதி காலமாக வாழ்ந்து வந்த ஆதிக்குடியினர், ஆதிச்சைவர்கள் ஆவர். அவர்கள் பேசிய மொழி தமிழ். கௌதம புத்தரின் போதனைகளைப் பின்பற்றி பௌத்த மதம் உப கண்டத்தையும் கடந்து ஈழத்திலும், மூன்றாம் நூற்றாண்டில் அரச கட்டில் ஏறியதன் மூலம், கணிசமான சைவர்கள் மதமாற்றம் செய்யப்பட்டார்கள். தொடர்ந்து ஏழாம் நூற்றாண்டில் வணிகத்திற்காக வந்த அராபியர்கள் உள்ளூர் தமிழ்ப் பெண்களை மதமாற்றம் செய்து மணம் முடித்துக் கொண்டமையினால், இஸ்லாமிய மதம் சிறிதளவாக எம்மண்ணில் கால் பதித்தது. இலங்கையில் கிறீஸ்தவ மதத்தின் பல பிரிவுகளின் தாக்கம் இருந்த போதும், போத்துக்கீசர் 1505 ஆம் ஆண்டு கோட்டை இராச்சியத்தை நயவஞ்சகம் செய்து ஆட்சியை அபகரித்ததுடன்,1597 ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை சூழ்ச்சிப் போரின் மூலம் கைப்பற்றி, தமது அதிகாரத்தை நிலை நிறுத்து வதற்கு மதமாற்றத்தை முழுமையாக ஏற்படுத்துவதற்கு சைவக் கோவில்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு, கிடைத்தவற்றை வைத்து கத்தோலிக்க தேவாலயங்கள் நிறுவப்பட்டன. சைவம் முழுமையாக தடைசெய்யப்பட்டு, மீறுவோர்மீது தலை துண்டிக்கப்பட்டு சந்தியில் தொங்கவிட்டார்கள். அக்காலம் ஈழச் சைவரின் மிகவும் இருண்ட காலமாகும். தொடர்ந்து 1640 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் போத்துக்கீசரை போரில் தோற்கடித்து, கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்களை தம்வசப்படுத்தி, கத்தோலிக்கத்திற்கு எதிரான தமது கிறீஸ்த்தவ மதத்தை அறிமுகப்படுத்தி மிதமான போக்கை கையாண்டு ஆட்சிபுரிய தேசவழமையாக சட்டங்கள் உட்பட தமது ஒல்லாந்து சட்டங்களை அறிமுகப்படுத்துவதில் மிகவும் அக்கறையுடன் இருந்தார்கள். 1796 ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் இருந்த ஆங்கிலேயர்கள், தருணம் பார்த்து, ஒல்லாந்தரை மடக்கி ஒப்பந்த அடிப்படையில் அவர்களை வேளியேற்றிய பின்னர் 1815 ஆம் ஆண்டு கடும் போரின் பின்னர் கண்டி இராச்சியத்தை ஒரே குடையின் கீழ் ஆட்சி அமைத்து, 1948 ஆம் ஆண்டு சுதந்திரமளித்து இலங்கையை பிரித்தானிய சாம்ராச்சியத்தின் பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் அங்கத்துவ நாடாக சேர்த்துக் கொண்டார்கள். ஆங்கிலேயர்கள் பெரும் கொடிய செயல்களில் ஈடுபடாவிட்டாலும், மிகவும் தந்திரமாக சைவர்களையும், பௌத்தர்களையும் சில்லறை சலுகைகளை கொடுத்து மேற்கத்திய ஆங்கில கல்வி வசதி, மருத்துவ வசதி, வேலைவாய்பில் முன்னுரிமை, பதவிகள், பட்டங்கள் போன்றவற்றை வாரி வழங்கி மதமாற்றம் மொழிமாற்றம் செய்து, தமது ஆட்சிக்குட்பட்ட அடிமைகளாக மாற்றுவதில், பெரு முனைப்புடன் செயல்பட்டு, போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியின் நீட்டலாக, கிறீஸ்தவ தேவாலையங்கள், அதையொட்டி கிறிஸ்தவ பாடசாலைகள், மேற்குலக வசதிகள் கொண்ட வைத்திய வசதிகள் போன்றவற்றை வழங்கி, மண்ணின் மைந்தர்களை தம்வயப்படுத்தி, மத மாற்ற, மொழிமாற்ற, உருமாற்ற வேலைகளை மதபோதகர்களைக் கொண்டு கனகச்சிதமாக செயல்பட்டு வந்தார்கள்.

இதனால் வந்த விளைவுகள், சுந்தரம்பிள்ளை சூசைப்பிள்ளையாகவும், சங்கரப்பிள்ளை சந்தியாப்பிள்ளையாகவும், மாரியம்மா மேரியம்மாவாகவும் பெயர்கள் மாற்றம் பெற்றதுடன், ஆங்கில பெயர்கள் கட்டாயமாக்கப்பட்டது. இதனால் சைவசமயத்தினர், சைவர்கள் கிறீஸ்தவர்கள் என பிரிவினையை உண்டாக்கி தமக்கே உரித்தான பிரித்தாளும் முறைமையை கையாண்டு ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள்.

இந்தக்கால கட்டத்தில் ஆங்கிலமொழிப் புலமையும், கிறீஸ்தவமத அடையாளமும் சமுதாய மேல்மட்ட அந்தஸ்து கொடுத்தமையினால், தாய்த் தமிழ் மொழி நலிவடைந்து அழிந்துவிடுமோ என்ற ஏக்கத்தையும், சைவசமயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுமோ என்ற அச்சம் மக்கள் மனதை வருடி துன்புறுத்திய வேளையில், இந்த துயரத்திற்கு விடிவு வேண்டி, வீட்டுக்கு வீடு மக்களின் வேண்டுதலுக்கு மனமிரங்கி இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டவர்தான், கந்தப்பிள்ளை ஆறுமுகம் பிள்ளை என இயற்பெயர் கொண்ட ஆறுமுக நாவலர் பெருமான். 1822 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நல்லூரில் பிறந்த அவருக்கு ஆங்கிலப் பாடசாலைக் கல்வியும், கிறீஸ்தவரின் நட்பும் அன்னியோன்னியமும், ஆங்கில ஆட்சியாளர்களினதும் அவர் சார்ந்த கிறீஸ்தவர்களது உள்நோக்கத்தையும் முழுமையாக புரிந்து கொள்வதற்கு பெரிதும் உதவி புரிந்தன. சைவமும் தமிழும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றதை கண்ணுற்ற ஆறுமுக நாவலர், தனது சுகபோகங்களை துறந்து, சைவத்தையும் தமிழையும் பேணவும் பாதுகாக்கவும் திடசங்கற்பம் கொண்டு, மிகவும் நுட்பமான முறையில் கிறீஸ்தவ ஆங்கிலேயரது சதித்திட்டங்களை முறியடித்து அயராது உழைத்தமையினால் இன்றும் தமிழும் சைவமும் நீடித்து, போர்ச் சூழலால் புலம் பெயர்ந்த நாடுகளிலும் இறுக்கமான வாழ்க்கை அமைப்பிலும் தமிழர்களாகவும் சைவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இன்று இருபத்து ஓராவது நூற்றாண்டில் 2019 ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சைவத்தமிழர்கள் நன்றியுணர்வுடன், நாம் நாமாக வாழ்வதற்கு யார்யார் பங்களிப்பு செய்திருக்கின்றார்கள் என, உலகளாவிய ரீதியில் திரும்பிப் பார்ப்போமானால் தவத்திரு ஆறமுகநாவலர் அடிகள் முதன்மை பெற்று இருக்கின்றார், என்பது வெள்ளிடைமலை.

நாவலரை நினைவகூர்ந்து அவர்தம் பாதம்பணிய இவ்வருடம் அவருடைய குருபூசையை முன்னிட்டு இலண்டன் லூசியம் சிவன்கோவில் சிவன் மண்டபத்தில் தவத்திரு ஆறுமுக நாவலர் விழாவும் குருபூசையும் லூசியம் தமிழ் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் ஆதரவுடனும் பங்களிப்பினோடு 22 கார்த்திகை 2019 வெள்ளிக்கிழமை மாலை மிகவும் சிறந்த முறையில் நடைபெற்றது. நாவலரின் திருவுருவச்சிலை சிவன் ஆலயத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு ஓதுவார் திரு தண்டபாணி அவர்களுடைய திருமுறை ஓதல், மங்கலவிளக்கேற்றல் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய, இவ்விழாவில் லூசியம் தமிழ் பாடசாலை மாணவச் செல்வங்களின் பண்ணிசை மற்றும் தமிழ் ஆங்கிலப் பேச்சுக்களுடன் ஸ்ரோன்லி அம்மன் தமிழ்ப் பாடசாலை மாணவிகள் தமது தேடுதலின் மூலம் அமைந்த பேச்சுக்களும் இடம் பெற்றது முக்கிய அம்சமாகும். தொடர்ந்து, திரு க. சிவானந்தன் தலைமையில் இலண்டன் வாழ் சைவத் தமிழ் அன்பர்கள் ஆர்வலர்களின் பங்களிப்பாக நாவலரின் வாழ்க்கை, வரலாறு, அவரது, சைவத்திற்கும் தமிழுக்குமான சேவையினை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார்கள். நாவலர் விழா திரு கனகரட்ணம் செல்வமணி அவர்களின் நன்றியுரையின் பின்னர் இரா போசனத்துடன் இனிதே நிறைவடைந்தது.

சைவத் தமிழர்களாகிய நாம் வீட்டுக்கு வீடு தவத்திரு ஆறுமுக நாவலரின் நாமத்தை நன்றியுணர்வுடன் பூசித்து வருவோமானால், சைவத் தமிழர்கள் உலகம் எல்லாம் பரந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும், நாட்டுக்கு நாடு காவலனாக இருப்பார் நாவலர்.

இன்று இருக்கின்ற முதியவர்கள் தலையாய கடமை யாதெனில், இன்றைய இளம் தலைமுறையினரும் அவர்தம் வாரிசுகளும் தொடர்ந்தும் சைவத்தையும் தமிழையும் தமது வாழ்வியலாக கொண்டு வாழ வேண்டுமாயின் வீட்டுக்கொரு நாவலரை உள்ளத்திருத்தி நாட்டிற்கொரு நாவலரை நாம் உருவாக்கினால், மட்டும்தான் வருங்காலம் தமிழிற்கும் சைவத்திற்கும் சுபீட்சமான காலமாக அமையும். ●

## யாழ்ப்பாணத்தில் மறைந்த மூத்த பத்திரிகையாளர்

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான பி.எஸ்.பெருமாள் சமீபத்தில், யாழ்ப்பாணம் அராலியில் காலமானார். மலையகத்தைச் சேர்ந்த இவர், இலங்கையின் பழம்பெரும் பத்திரிகையான 'வீரகேசரி'யின் உதவி ஆசிரியராகத் தன் பத்திரிகை வாழ்வை ஆரம்பித்து, பின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' நாளிதழில் நீண்ட காலம் பணியாற்றினார். 'வீரகேசரி'யில் பிரதம ஆசிரியராக இருந்த கே.பி.ஹரன் 'ஈழநாடு'வில் ஆசிரியராகவும், 'வீரகேசரி' ஆசிரியர் குழுவில் இருந்த எஸ். எம்.கோபாலரத்தினம் செய்தி ஆசிரியராகவும் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அவர்களோடு பணியாற்றிய பெருமாள் 'ஈழநாடு'வில் இணைந்து கொண்டார். 'ஈழநாடு'வில் பதில் ஆசிரியராகவும் கடமையாற்றியிருக்கிறார். 'ஈழநாடு'வில் பணியாற்றிய அராலியைச் சேர்ந்த ஈஸ்வரியை மணமுடித்து ஒரு மகனுக்குத் தந்தையாக அவ்வூரிலேயே வாழ்ந்து வந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' நாளிதழிலும் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கிறார். இவரது எழுத்து, ஊடகப் பணிகளைக் கௌரவிக்குமுகமாக சமீபத்தில் 'கலாபூஷணம்' பட்டமளித்து, கௌரவிக்கப்பட்டார். அவரது விருப்பத்துக்கு ஏற்ப யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அவருடைய உடல் எடுத்துச் செல்லப்பட்டது. அவருக்கு வயது 85. "ஏசுவார்கள் எரிப்பார்கள் அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள், உண்மையாக எழுதுங்கள்" என்ற கொழும்புத்துறை சித்தர் யோகம் சுவாமிகளின் ஆசியோடு ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' ஊடகத்தில் உண்மையான பங்களிப்பை நல்கி மறைந்த பெருமகன் பெருமாளின் மறைவுத் துயரத்தில் அவர் மனைவி ஈஸ்வரி, மகன் மற்றும் நெருக்கமான உறவுகளோடு, பெருமாள் குடும்பத்துக்கு நெருக்கமான 'புதினம்' பங்கு கொள்கிறது.

# குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய்கள்!



வளர்ந்துவரும் நவீன உலகில் உணவு பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, சூழல்கள் மற்றும் கால நிலை மாற்றத்தினால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. பிறந்த குழந்தை முதல் முதியவர்கள் அனைவருக்கும் சர்க்கரை நோய் பாதிப்பு உருவாகிறது. ஒவ்வொரு வீட்டிலும் டிவி, கிரைண்டர், மிக்ஸி இருப்பதுபோல் சர்க்கரை நோயும் இருக்கிறது.

சாதாரணமாக முன்பு எல்லாம் வீட்டிற்கு வந்த விருந்தாளிகளிடம் எப்படி இருக்கிங்க? - என்று கேட்பது மாறி உங்களுக்கு சர்க்கரை நோயின் அளவு எவ்வளவு இருக்கிறது என்றுபேசிக் கொண்டிருக்கிறார்கள். 35 வயதிற்குமேல் சர்க்கரை நோய் என்பது சாதாரணமாக மாறிவிட்டது.

முன்பெல்லாம் சர்க்கரைநோய் என்பது பணக்காரர்களுக்கு மட்டும் வரும் நோய் என்று கூறுவதுண்டு. ஆனால், இன்றைய காலகட்டத்தில் பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அனைவருக்கும் சர்க்கரை நோய் இருக்கிறது. தினமும் காலையில் எழுந்துடீ, காபிகுடிப்பதைப் போன்று, இன்சுலின் போட்டுக்கொள்வதும், மாத்திரிகைகள் எடுத்துக்கொள்வதும் நம் அன்றாட வாழ்வின் அங்கமாக மாறிவிட்டது. உலகில் சர்க்கரைநோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மூன்றாவது இடத்தில் உள்ளது இந்தியா.

**சர்க்கரை நோய் இரண்டு வகைப்படும். முதல்வகை சர்க்கரை நோய் (சிறார் சர்க்கரை நோய்) இரண்டாம் வகை சர்க்கரை நோய்**

இரண்டாம் வகை சர்க்கரைநோய் 35 வயதை கடந்தவர்களுக்கு ஏற்படும். இரண்டாவது வகை சர்க்கரை நோயானது உணவுமுறைகள் மற்றும் வாழ்க்கை முறைகளினால் ஏற்படும் நோயாகும். அதாவது உடலுழைப்பு அதிகமில்லாத பணிகள் செய்வது, சர்க்கரை அதிகமாக உள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்வது, அதிகமானமன அழுத்தம், பதற்றம் ஆகியவற்றால் உருவாவது தான் இரண்டாவது வகை.

பிறக்கும் போது இன்சுலின் குறைபாடு உடையவர்களுக்கு முதல் வகை நீரிழிவு நோய் ஏற்படும். அவர்கள் அன்றாடம் இன்சுலின் ஊசி போட வேண்டும். அது தவறினால் கடுமையான விளைவுகள் ஏற்படும். முதல் வகை நீரிழிவு நோயை சிறார்வகை நீரிழிவு நோய் என்றும் அழைக்கலாம். ஏனென்றால் இந்த வகை நோய் பெரும்பாலும் சிறார்களையே தாக்கும். பெரும்பாலும் இந்நோய் 5 வயதுக்கு பிறகுதான் தோன்றும். ஆனால், சிலர் 30 வயதுக்கு பிறகும் இவ்வகை நோயைப் பெறுவதில்லை.

பொதுவாக சில குழந்தைகள் தூங்கவும், தண்ணீர் குடிக்கவும், உணவு உண்ண வும் மற்றும் அடிக்கடி சிறுநீர் கழிக்கவும் செய்வார்கள்.ஆனால் இது சாதாரணமாக நடப்பது தான் என்று பெற்றோர்கள் கவனக்குறைவாக இருக்க வேண்டாம். அதிக மயக்கம், அதீத பசி, அடிக்கடி சிறுநீர் கழித்தால் அவை முதல்வகை நீரிழிவுநோய்க்கான அறிகுறிகள். இவ்வகை நோய்க்கான அறிகுறிகள் திடீரென குழந்தைகளிடம் தோன்றலாம். எனவே பெற்றோர்கள் கவனமாக இருப்பது அவசியம்.

முதல் வகை சர்க்கரை நோய்க்கான அறிகுறிகள் அடிக்கடி சிறு நீர் கழிப்பது, அதீத தாகம் எடுத்தல், அதீத பசி எடுத்தல், உடல் எடை குறைவு, உடல் சோர்வு, சுவாசிப்பதில் சிரமம், ஈஸ்ட் தொற்றுகள், திடீரென வித்தியாசமாக நடந்துகொள்ளுதல், கனமான சுவாசம், சுவாசிக்கும் போது முணுமுணு இனிப்பு, மது போன்ற வாசனையை நுகர்தல் அதிகமயக்கம், ஆற்றல் இல்லாமை இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத் துவரை அணுகி குழந்தைக்கு உடல் பரிசோ தனை மற்றும் சிறுநீர் பரிசோ தனை செய்து பார்க்கலாம்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமானால் இதயம், சிறுநீரகம், கண்கள், கால்களில் உள்ளரத்தக்குழாய்களில் பாதிப்பு ஏற்படும். சிலருக்கு மூளைக்கு செல்லும் ரத்தக்குழாய் பாதிக்கப்பட்டு, பக்கவாதம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

உங்கள் குழந்தைக்கு ஏற்கனவே முதல்வகை சர்க்கரை இருப்பது கண்டறியப்பட்டால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும் போது சில அறி குறிகள் வைத்து தெரிந்து கொள்ளலாம். மங்கலான அல்லது இரட்டை பார்வை, தலைச்சுற்றல் மற்றும் தலைவலி, மயக்கம் அல்லது சோர்வு, வியர்த்தல், ஈரமான தோல், தீவிர அல்லது திடீர் பசி, பலவீனம், விரைவானதுடிப்பு என்பன அவை.

குழந்தைகளுக்கு ஏன் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது என்பது அனைவரின் மனதிலும் ஒரு கேள்விகுறியாகவே இருக்கும். இது ஒரு ஓட்டோ இம்யூன் நோயாகத்தோன்றுகிறது. இது உடலில் பொதுவாக இன்சுலின் உருவாக்கும் செல்களைத் தாக்கி அழிக்கிறது.

பரம்பரை மூலமாக் சர்க்கரை நோய் வருவது என்பது குறைவான சதவீதம் மட்டுமே என்கிறார்கள் மருத்துவர்கள். கணையத்தால் இன்சுலின் சுரக்காத போது உடலுக்கு தேவையான இன்சுலினை வெளியில் இருந்து செலுத்த வேண்டும். இந்த பாதிப்பு இருந்தால் மாத்திரைகளுடன் ஊசியும் பரிந்துரைக்கப்படும். இன்சுலின் அளவுகள் இரத்த சர்க்கரை அளவை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அவற்றின் இரத்த சர்க்கரை அளவுகள், உணவுகள் மற்றும் செயல்பாட்டு நிலைகளையும் கவனமாக கண்காணிக்க வேண்டியது அவசியம். குழந்தைகள் பாதிக்கப்படும் இந்த முதல் வகை சர்க்கரை நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்துவிட்டால் சிகிச்சையும் எளிதாக இருக்கும்.

**– டாக்டர்**

---

*6ம் பக்கத்தின் தொடர்ச்சி*

**வாகரைக் கிராமத்தில் 9 கிணறுகள்**

பழங்குடி மக்கள் வாழுகின்ற வாகரை என்ற இடத்தில், புதிதாகக் கட்டிய ஒன்பது குழாய்க் கிணறுகளை மக்களிடம் கையளிக்கும் பணியானது அரச அதிபர் திரு.உதயகுமார், அப்பகுதி கிராமசேவகர், எமது ஆலய அடியார்கள் முன்னிலையில் விமரிசையாக நடைபெற்றது. இக்கிராம மக்கள் கூலி வேலை, மீன் பிடித்தல், தேன் எடுத்தல் ஆகிய வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர். இங்கே வறட்சியானது கிராமத்தில் மட்டுமல்லாது, ஒவ்வொருவர் முகத்திலும் காணப்பட்டது. இங்கேயுள்ள பாலைவனத்தரைகளில் பூக்கள் மேலும் மலரச் செய்வது எம்மக்களின் முக்கிய கடமையாகின்றது.

**கட்டுவன் முறிப்பு (ஆண்டான் குளம்)**

கட்டுவன் முறிப்பு என்ற கிராமத்தை, மூன்று வருடங்களுக்கு முன்னர் எமது ஆலய அடியார்களாகிய திருவாளர்கள் இரத்தினசிங்கம், அபயலிங்கம், சர்வநாதன் ஆகிய அன்பர்கள் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். அதனடிப்படையில் எமது ஆலயம் தொடர்ச்சியாக ஒருவருடம் அங்குள்ள பாடசாலையில் வறுமையில் வாடுகின்ற சிறார்களுக்கு, பால் வினியோகத்தை வழங்கும் திட்டத்தை முன்னெடுத்தார்கள். இது மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.யோகேஸ்வரன் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்தமுறை நாங்கள் முன்னெடுத்த பிரயாணத்தில் கட்டுமுறிப்புக் கிராமத்திற்குச் சென்றோம். மட்டு அரச அதிபர் திரு.உதயகுமார் எங்களை அழைத்துச் சென்றார். நீண்டதூரம் ஒரே காட்டுப்பாதை. இது சீரற்றநிலையில் இருந்தபடியால் எமது பயணம் மிகக்கடினமாகவே இருந்தது. யானைகள் உலாவும் பாதையென்று எங்களுக்குக் கூறப்பட்டது. அதை நிரூபிப்பதுபோல யானைக்கழிவுகள், ஆங்காங்கே பாதையில் காணப்பட்டன. கிராமசேவையாளர், அரசஅதிபர் உட்பட இக்கிராமத்தில் அபிவிருத்திச்சபை உறுப்பினர்களான திருவாளர்கள் குருகுலசிங்கம்,



தெய்வேந்திரம் ஆகியோர் எங்களைக் கிராம மக்களடங்கிய கூட்டமொன்றினை ஒழுங்கு செய்து, பங்குபெறச் செய்தனர். அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தோம். இக்கிராமத்தில் பாம்புக்கடியால் இறப்போர்கள் அதிகம் என்ற புள்ளிவிபரமும் தரப்பட்டது.

இங்குள்ள கிணறுகளில் 2 கிணறுகள் மட்டும் குடிதண்ணீருக்குரிய கிணறுகளாக உள்ளனவென்றும், நான்கு கிணறுகள் உப்புத்தண்ணீராக இருக்கின்றனவென்ற விபரங்களும் எமக்குத் தரப்பட்டன.

ஒரு குழாய்க் கிணறு வெட்ட, சுமார் மூன்று லட்சம் ரூபா முடியுமென்ற தகவலும் எமக்குத் தரப்பட்டது. இங்குள்ள பாடசாலையைக் கண்ணுற்றோம். அடிப்படை வசதிகளற்றுக் காணப்பட்டது. மலசலகூடம் சீர்கெட்டு இருந்தது. பாடசாலைக் கட்டிடம் சீராக இருக்கவில்லை. குறைகளைக் கேட்டுக் குறிப்புகள் எடுத்துக்கொண்டோம். மிகவும் பின்தங்கிய இக்கிராமத்தில் நான்கு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர். பல குடும்பங்கள் பெண் தலைத்துவமாகவே செயற்படுகின்றன.

இந்தப் பாலைவனக் கிராமத்தில் பூக்கள் மலர எமது ஆலயமும், வேறு தர்மப்பணி நிறுவனங்களும் இணைந்து தொண்டு உதவி செய்தல் மிக அத்தியாவசியமாகின்றது. இக்கிராமம் மட்டக்களப்பின் எல்லைக்கிராமங்களில் ஒன்றாகும். 420 மக்களைக் குடிமக்களாக மட்டும் கொண்டுள்ள இக்கிராமம் இந்திய, இலங்கைப் படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளானதென்ற தகவலும் எமக்குத் தரப்பட்டது.

**உயிரிழை (மாங்குளம்)**

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தில், முள்ளம்தண்டு பாதிப்புற்ற இளைஞர், யுவதிகள் இங்குள்ள காப்பகத்திலே தங்கவைக்கப்பட்டுள்ளனர். வண்டில்களில் அமர்ந்து கொண்டே இவர்கள் தமது வாழ்வையோட்டுகின்ற பரிதாபத்தை இங்கு பார்த்து, விசனப்பட்டோம். சமையலுக்கு ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும், ஏவல் வேலைகளுக்காக ஓர் பையனும் இங்கு காணப்பட்டனர்.

மாங்குளம் சந்தியில் இருந்து வவுனியா செல்லும் பாதையாகிய கண்டிவீதி A9ல், இக்காப்பகம் அமைந்துள்ளது. மிகப்பெரிய ஊடக நிறுவனம் ஒன்று, முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோரை நீண்ட காலம் பராமரித்தாலும், நிதிக்குறை காரணமாக, பராமரிப்புச் செலவை பெருமளவு தற்போது நிறுத்திக்கொண்டது. இதனால் இங்கு வதியும் முள்ளந்தண்டு பாதிப்புற்றோர் மிகவும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். இதில் ஒருசிலர், உடல் ஊனப்பட்டோர், ஏற்கெனவே மணமுடித்தவர்கள். இவர்களை உறவினர்கள், உற்றார்களும் கைவிட்டிருப்பது மிகத்துன்பமானது. சமூக நலனுக்காகப் போராடியவர்கள் இப்போது அன்றாட வாழ்வுக்காகப் போராடுகின்றனர். உயிரிழை அமைப்புக்கு ஆலயம் முள்ளம்தண்டு பாதிக்கப்பட்டோர்கள் 47 பேரில், 25 பேர்களுக்கு அனுசரணையாளர்களை (*Sponsorship*) ஏற்படுத்தி, உதவிக்கரம் தருவதாக உத்தரவாதம் கொடுத்துள்ளது.

**பதுளை-மலையக இல்லம்**

இந்த இல்லத்தின் வளர்ச்சிக்காக முன்னாள் அறங்காவலர் அமரர் பிரேமச்சந்திரன் தனிப்பட்ட முறையில் பல உதவிகளைச் செய்திருக்கிறார். இந்த இல்லத்திற்காகக் காணி வாங்க எமது ஆலயம் உதவி செய்துள்ளது. சரியான கட்டிடம் ஒன்றை அமைப்பதற்குரிய உதவிகளைச் செய்துதருமாறு இதன் பொறுப்பாளர் திரு.கிருஷ்ணசாமி வேண்டுதல் விடுத்திருக்கின்றார். ●

# கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர் வானம் ஏறி வைகுண்டம் காட்டமுடியுமா?

**2024-ம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதே இந்தியாவின் முதன்மை இலக்கு' – பிரதமர் மோடியும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் மீண்டும் மீண்டும் சொல்லும் வார்த்தைகள் இவை.**

ஒரு டிரில்லியன் என்றால் ஒரு லட்சம் கோடி. அமெரிக்க டாலருக்கு இந்திய ரூபாயின் மதிப்பு என்ன என்பதையும் 5டிரில்லியன் டாலருக்கு எத்தனை பூஜ்யம் என்பதையும் கணக்கிட்டுக்கொள்ளுங்கள். இந்தியப் பொருளாதாரம் மந்தநிலையில் இருக்கிறது. பல நிறுவனங்கள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேலையிழப்பு அதிகரித்திருக்கிறது. ஆட்டோமொபைல் துறை அடிவாங்கியிருக்கிறது. பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல் ஊழியர்களுக்கு சம்பளம் போட வழியில்லை. விருப்ப ஓய்வுத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியப்பொருளாதாரம் 5டிரில்லியன் டாலரை எட்டும் என்பது நனவாகும் கனவா, வெறும் பகல்கனவுதானா? இன்றைய நிலையில் இந்தியா உலக அளவில் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாக இருக்கிறது. கடந்த 2018-ன் இறுதியில்தான், ஆறாவது இடத்தில் இருந்த பிரான்ஸைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அந்த இடத்தை 2.59 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்துடன் இந்தியா கைப்பற்றியது. நடப்பு ஆண்டின் இறுதிக்குள் 3 டிரில்லியன் டாலர் மதிப்பு கொண்ட பொருளாதார நாடாக இந்தியா உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் குறுகியகால இலக்கை நாம் வெற்றிகரமாக அடைந்துவிட்டால், ஐந்தாவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்தையும் தாண்டிச் சென்று உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துவிடுவோம் என்பது மத்திய அரசின் வாதம். ஆனால், இதைச் சாதிக்க, அடுத்த 5 ஆண்டுகளில், மத்திய அரசாங்கம் சந்திக்க வேண்டிய சவால்களும், முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் ஏராளம். "உலகின் முன்னேறிய நாடுகள், 3 டிரில்லியன் டாலருக்குக் கீழ் இருந்து 5 டிரில்லியன் டாலர் மதிப்பு கொண்ட பொருளாதார நாடாக மாறுவதற்கு எடுத்துக்கொண்ட காலகட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாகத் திகழும் அமெரிக்கா இந்நிலையை அடைவதற்கு 9 ஆண்டுகளை எடுத்துக்கொண்டது. ஆனால் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் இருக்கும் சீனாவோ நான்கே

ஆண்டுகளில் 2.75 டிரில்லியன் டாலரிலிருந்து 5.11 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்துக்கு முன்னேறியது. எனவே, அடுத்த 5 ஆண்டுகளில் 5 டிரில்லியன் டாலர் நிலையை இந்தியா எட்டிவிடும் என்கிறார்கள் சிலர். மேலும், இந்தியா சுதந்திரம் பெற்றபிறகு, ஒரு டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதார நாடாக உயர்வதற்கு சுமார் 55 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் நமது பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அளவுக்கு அதிகரித்திருக்கிறது. எனவே, அடுத்த 5 ஆண்டுகளில் 5டிரில்லியன் டாலர் பொருளாதாரம் சாத்தியமே. -

இந்தியப் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்வதில் தமிழகத்தின் பங்கு மிக அதிகம் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இந்தியாவின் ஜி.டி.பி வளர்ச்சியில் தமிழகத்தின் பங்கு பெருமளவு. மராட்டிய மாநிலத்தை அடுத்து அந்நிய முதலீட்டை அதிகம் பெறும் மாநிலம் தமிழகம்தான். மேலும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், மென்பொருள் உற்பத்தி, பி.பி.ஓ போன்ற துறைகளில் மிளிர்கிறது தமிழகம். இந்த வளர்ச்சியினால் தமிழகத்தின் வேலைவாய்ப்பு நிலவரம் முன்னேறி, படித்த இளைஞர்களிடம் வேலையில்லாத் தட்டுப்பாடு குறைக்கப்பட்டுவிட்டது.

5டிரில்லியன் பொருளாதாரம் சாத்தியமானால், அதில் தமிழகத்தின் பங்கு பெருமளவு இருக்கும் என்பதே பல பொருளாதார நிபுணர்களின் கருத்து. சென்னைப்



பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத் தலைவர் க.ஜோதி சிவஞானம், "பண மதிப்பிழப்பு நடவடிக்கை , ஜி.எஸ்.டி அறிமுகம் போன்றவற்றால் பொருளாதார வளர்ச்சி சரிந்திருக்கிறது. உலகளவில் பொருளாதாரத்தை அளவிட இரு மதிப்பீடுகள் முக்கியம். ஒன்று ஜி.டி.பி வளர்ச்சி விகிதம். மற்றொன்று நிதிப்பற்றாக்குறை. இந்தியாவில் இந்த இரண்டுமே இன்று கவலைக்கிடமாக இருக்கிறது. இந்த நிலையில் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக 2024ல் இந்தியாவை வளர்த்தெடுப்போம் என்கிறார்கள். முன்பு அச்சே தின்' வரும் நல்ல காலம் பிறக்கப்போகிறது) என்று சொன்னதைப் போலத்தான் இது" என்கிறார். "கடந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 6.8 சதவிகிதம். கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டின் வளர்ச்சி விகிதம் 5.8 சதவிகிதம். ஆனால், இந்த வளர்ச்சி விகிதம் எல்லாமே, திருத்தப்பட்ட முறையின் கீழ் காட்டப்பட்ட வளர்ச்சி விகிதம்" என்கிறார் மூத்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான அரவிந்த் சுப்பிரமணியம். "அதாவது, 2014-ம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்ற உடனே பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிடும் முறையையே மாற்றி அமைத்தார்கள். கணக்கிடும் முறையை மாற்றிய உடனேயே எதுவுமே நடக்காமல் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 2 சதவிகிதம் அதிகரித்தது. இந்த விவகாரம் கடுமையாகப் பொதுவெளியில் விவாதிக்கவும்பட்டது. அப்படிப் பார்க்கும் போது பழைய கணக்கிடும் முறையின்படி, கடந்த காலாண்டின் அடிப்படையில் வளர்ச்சிவிகிதம் வெறும் 3:3 சதவிகிதம்தான். முழு ஆண்டுக்கும் எடுத்துப் பார்த்தால்கூட, 4.3 சதவிகிதம்தான் வளர்ச்சி. மோடி சொல்வதுபோல, இப்போது உள்ள 5.8 சதவிகித வளர்ச்சியிலிருந்து 8 சதவிகித வளர்ச்சியை அடைய முடியுமா என்பதே சந்தேகம். அப்படியே 8 சதவிகித வளர்ச்சி அடைந்தால்கூட 5டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக ஆக்க முடியுமா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில், அண்மைக்காலமாகவே ஒரு துறை விடாமல் எல்லாத் துறையும் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. புள்ளியியல்துறை அமைச்சகத்தின் தேசிய மாதிரி சர்வே அலுவலக (NSSO) மதிப்பீட்டின்படி, வேலைவாய்ப்பின்மையின் உயர் விகிதம் 6.1 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச வேலையின்மை . 2019 ஜூன் மாத நிலவரப்படி

வேலையின்மையின் விகிதம் மேலும் கடுமையாகி 7.9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. வளர்ச்சியின் முக்கிய அங்கம் முதலீடு. முதலீடு இல்லாமல் வளர்ச்சியை அடையவே முடியாது. ஆனால், இந்தியத் தொழில்துறைக்கான முதலீடு கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர் சரிவைச் சந்தித்துவருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் 34 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. சரிந்துகொண்டிருக்கும் பொருளாதாரத்தைச் சீர்செய்ய, ஒட்டுமொத்தப் பொதுமக்களின் தேவை மற்றும் தனியார் முதலீட்டை அதிகப்படுத்துவது முக்கியம்தான். அந்த நோக்கில் ரிசர்வ் வங்கி வட்டிவிகிதத்தைக் குறைத்துக் கொண்டே இருக்கிறது. ஓராண்டில் 1.1 சதவிகிதம் வட்டிவிகிதத்தைக் குறைத்தபின்னரும், இது வரும்காலங்களிலும் தொடரும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது. ஆனால் வங்கிக்கடன் வாங்கியிருக்கும் தனிநபர்கள்கூட இதன்மூலம் எந்தவொரு பலனையும் அனுபவிக்கவில்லை. அதனால்தான் மீண்டும் ரிசர்வ் வங்கி தலையிட்டு, அக்டோபர் 1-ம் தேதி முதல் புதிய விதிமுறைகளை அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறது. சொல்லப் போனால் தனியார் முதலீடும் பொருளாதார வளர்ச்சியும் மேலும் தொடர்ந்து சரிந்து கொண்டேதான் வருகின்றன. தற்போதைய நிதிநிலை அறிக்கையின்படி பார்த்தால் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த வருவாய் 2019-20ஆம் ஆண்டில் 19,62,000 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தச் செலவு 27,86,000 கோடி ரூபாய். இந்த இரண்டுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கடனாக வாங்கப் போகிறார்கள். அதாவது, கிட்டத்தட்ட 7 முதல் 8 லட்சம் கோடி ரூபாய் கடனாக வாங்கப்படவுள்ளது. இது இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 3.3 சதவிகிதம். இதில் கவலை தரக்கூடிய அம்சம், கடனாக வாங்கக்கூடிய தொகையிலிருந்து 6.6 லட்சம் கோடி ரூபாயை ஏற்கெனவே வாங்கிய கடன்களுக்கு வட்டியாகச் செலுத்த வேண்டும் என்பதுதான். இதுதவிர மாநில அரசுகளின் பற்றாக்குறை இருக்கிறது. இப்படியாக 9-10 சதவிகிதம் அளவுக்கு நிதிப்பற்றாக்குறை இருப்பது, நாடு அன்றாடச் செலவுகளையே சமாளிக்க முடியாத நிலையில் இருப்பதைத்தான் காட்டுகிறது. உள்நாட்டுப் பிரச்னைகளுக்கான தீர்வினைக் கண்டுபிடித்து

அதைச் செயல்படுத்தாமல், 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை உருவாக்குவதில் என்ன பயன்?" என்ற கேள்வியோடு முடிக்கிறார். அரவிந்த் சுப்பிரமணியம் கேள்வியில் உள்ள யதார்த்தம் கசக்கும் என்றாலும் உண்மையான யதார்த்தம். கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் காட்டப்போகிறார்களாம்' என்கிற பழமொழிதான், மத்திய அரசின் '5 டிரில்லியன் டாலர்' பேச்சுகளைப் பார்க்கும்போது நினைவுக்குவருகிறது. 5 டிரில்லியன் டாலருக்கு எத்தனை பூஜ்யம் என்று கணக்கிட்டுவிட்டீர்களா? தகுந்த திட்டமிடல்கள் இல்லையென்றால் பூஜ்யங்கள் மட்டுமே மிஞ்சும் என்பதை மத்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும். ●

We are an independent charity based in South-West London, offering a personalised service to adults with learning disabilities 52 weeks a year. Our mission is to maximise the potential of everyone using our service and to do this we insist on employing exceptional people, cutting edge resources and well-resourced spaces. We embrace collaboration and place great value on our many partnerships, above all our relationship with family carers.

At One Trust we offer many activities that are outcome focused for the wellbeing of our service users. We would like to reach out to South Asian communities as they are currently under represented in our service. The service provides bespoke opportunities for adults with learning disabilities covering all aspects of their lives. One Trust provides care management support and aims to meet the individual needs of the person and their carer. One Trust is focused on achieving the best outcome of our service users.

**For more information about us please visit our website www.onetrust.co.uk alternatively please give Prakash Patel a call on 020 3096 9132 or to speak in Tamil Call Thava Navaratnam on 07940 380502.**

# மறைந்துள்ள ஆற்றலை வளர்க்கும் பயிற்சி

தென்மேற்கு லண்டன் பகுதியில் இயங்கும் சுயாதீனமான அறக்கட்டளை நிலையம் (INDEPENDENT CHARITY) ஆகும். மூளை வளர்ச்சி குறைந்தோருக்கு (18 வயது மேற்பட்ட ஆண் – பெண் இருபாலாருக்கும்) அவர்களுக்குள்ள ஆற்றலை அதிகரிக்கும் வகையில், அவர்களுடைய செயல்பாடுகளை (ACTIVITIES) பெற்றோர்கள், கவனிப்பாளர்கள் ஊடாக தன்னியக்க கருவிகளைக் கொண்டும், அவை தொடர்பான அலுவலங்கள் மூலமாகவும் உதவி வருகிறோம். 52 கிழமைகளுக்கு ஒரு வருடத்துக்கு பெற்றோர்கள் / கவனிப்பாளர்களின் நலம் கருதி, அவர்கள் பராமரிப்பில் உள்ள, அவர்களுடைய பிள்ளைகளுக்கான தனிப்பட்ட சேவையை (PERSONALISED SERVICE TO ADULTS WITH LEARNING DESABLITITIES) வழங்கி வருகிறோம்.

**ONE TRUST 21 CHURCH LANE, TOOTING,**
**LONDON SW17 9PW**
**website www.onetrust.co.uk**

விவரங்களுக்கு : PRAKSH PATEL - 020 3096 9132
தமிழில் பேச : தவா நவரட்ணம் - 07940380502





ஆலய தொடர்புகளுக்கு.

10 Jersey street
Port Talbot. SA13 1YR
Wales, U.K
01639885232
07828108349

ஓம் ஸ்ரீராம ஜெயராம ஜெயஜெய ராம்.

# அஞ்சனை மைந்தனின் அலங்காரத் தீபத்திருவிழாவும் ஜெயந்தி தினமும்

வேல்ஸ் தான்தோன்றி ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு நீங்கள் செய்யும் யாத்திரை உங்கள் துன்பங்களுக்கு நல்லதோர் மாத்திரை.

மனத்திரையில் மாருதியை நிறுத்தி விழித்திரைகளில் நீர் திரையிட விசுவரூப ஆஞ்சநேயனை விருப்பமுடன் வணங்கினால் காலமெல்லாம் காத்தருள்வான்.

எதிர்வரும் 16/12/2019 திங்கட்கிழமை பகல் ஆரம்பமாகி தொடர்ந்து 9 நாட்கள்

## இலங்கார தீபத்திருவிழா

நடைபெற்று 10ஆவது நாளாகிய 25/12/2019 புதன் கிழமை காலை 10:00மணிக்கு

## ஆஞ்சநேயர் ஜெயந்தி தின விழா

மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

மேலும் சூரியன், சந்திரன், குரு, சனி, கேது, புதன் ஆகிய ஆறு கிரகங்களும் தனுசு ராசியில் கூடும் நாளில் வரும் அனுமன் ஜெயந்திதின விழாவில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு கிரகதோசங்கள் நீங்கப்பெற்று,இன்னல்கள் நீக்கி இனிய வாழ்வளிக்கும் மாருதியின் இன்னருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(ஆலயம் M4 நெடுஞ்சாலையில் 40th exit இலிருந்து 10நிமிட நேர பயணத்தூரத்தில் அமைந்துள்ளது.)

ஆலய நிர்வாகம்.